T.S. பாண்டியன்
மாலைமணி
ஆசிரியர்: பி.எஸ்.இளங்கோ
சுடுகாட்டுச் சாம்பல்
20·9·59
விலை 16 காசுகள்

மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

மணி 1 | 20—9—59 | ஒலி 49

செல்லுங்கள்! சொல்லுங்கள்! பகையை வெல்லுங்கள்!

பூவிருந்த வல்லியிலே நடைபெற்ற செங்கற்பட்டு 'மாவட்ட மாநாட்டில்' நமது அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய பொன்னுரையை மாலைமணியில் வெளியிட்டிருக்கிறோம்! மாநாட்டிற்கு வந்தவர்களும், வராதவர்களும் அண்ணாவின் அறிவுரையை ஒரு தடவைக்கு பல தடவைப் படித்து பயன் பெற வேண்டும்—அதன் படி செயல் புரிய வேண்டும் என்பதே நம்முடைய ஆசையாகும்.

திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்டு பத்தாண்டுகள் முடிந்து பதினோராவது ஆண்டும் பிறந்து விட்டன! அதற்கு முன்பு நாம் திராவிடர் கழகத்திலும், அதற்கு முன்பு சுயமரியாதை இயக்கத்திலும் சேர்ந்து பணிபுரிந்து வந்திருக்கிறோம்! நல்ல பல செயல்களையும் செய்திருக்கிறோம்.

ஏறத்தாழ முப்பதாண்டு காலம் பணிபுரிந்து பல இலட்சம் மக்களுக்கு நம் கொள்கைகளைச் சொல்லி சில இலட்சம் மக்களை நமது இயக்கத்தில் சேர்த்திருக்கிறோம்!

இது பெரும் சாதனை என்பதை எந்த அரசியல் அறிவு பெற்றவனும் மறுக்க முடியாது.

"முப்பதாண்டு காலம் பணிபுரிந்து சில இலட்சம் மக்களைத் தானே சேர்க்க முடிந்தது! இது ஒரு பெரும் சாதனையா?" என்று பலர் சொல்லக் கூடும்! அவர்களை அரசியல் அஞ்ஞானிகள் என்று சொல்லுவதைத் தவிர நமக்கு வேறு வழி ஒன்றும் தோன்றவில்லை.

சுயமரியாதை இயக்கமாகப் பிறந்த காலம் தொட்டு இன்று வரை நாம் அரசியல் துறையில் மட்டும் பணிபுரியவில்லை! சமுதாயத் துறையிலே பணிபுரிந்து வந்திருக்கிறோம்! பொருளாதாரத் துறையிலே பணிபுரிந்து வந்திருக்கிறோம்! அரசியல் துறையிலே பணிபுரிந்து வந்திருக்கிறோம் என்பதை அனைவரும் அறிவார்கள்.

எல்லாத் துறைகளிலும் மிக எளிதாகப் பணிபுரிந்து விடலாம்! ஆனால் சமுதாயத் துறையில் பணிபுரிவது எளிதல்ல! எல்லா நாடுகளிலும் உள்ள சமுதாயத் துறையைக் காட்டிலும் நம்முடைய நாட்டில் உள்ள சமுதாயத்துறை மிக மிக சீர்கெட்டுக் கிடந்தது என்பதை உலகமே அறியும்.

எதற்கெடுத்தாலும் ஜாதி முறை, எதற்கெடுத்தாலும் மூட நம்பிக்கை, எதற்கெடுத்தாலும் கடவுள் போதை! நம்முடைய மக்கள் ஜாதியால் மெலிந்து, மூட பக்தியால் எலும்புக் கூடாகி வாழ்வை இழந்து கிடந்தார்கள்! இதை ஓரளவு—ஓரளவு என்று சொல்லுவது தவறு—முழு அளவுக்கு ஒரு கால் பங்கு குறைவான அளவில் செப்பனிட்டு விட்டோம்.

நேற்று குஞ்சிதபாதம்பிள்ளை என்று சொல்லிக்கொண்டவன் இன்று குஞ்சிதபாதமாகி விட்டான்! குஞ்சிதபாதம் என்று தன்னை சொல்லிக் கொள்வதைவிட கரிகாலன் என்று சொல்லிக் கொள்ளவும் ஆசைப்படுகிறான்.

நேற்று வரை கோயிலுக்குப் போய்க் கொண்டிருந்தவன் இன்று நூலகத்தை நாடிச் செல்லுகிறான்.

நேற்றுவரை விதியை நம்பிக்கிடந்தவன்—இன்று மதியை மதிக்கத் தொடங்கி விட்டான்.

இது நாம் செய்த சாதனை

நாம் மட்டும் சமுதாயத் துறையில் புகாமல், ஜாதி பேதங்களை சாடாமல், கடவுளர்களின் விவகாரங்களில் புகாமல் வெறும் அரசியல் துறையில் மட்டும் பணிபுரிந்திருந்தால் பண்டிதர் பதவி ஏற்ற அன்றே நமது பேரறிஞர் அண்ணாவும் பதவி ஏற்றிருப்பார்! காமராஜரின் நாவும், நிதி அமைச்சரின் துடுக்குதனமும், ராஜாராம் நாயுடுவின் கிண்டலும் பொடிப் பொடியாகி இருக்கும்! ஆனால் அந்த சுதந்திரத்தால் நமது தென்னகம் ஒருவித பயனையும் அடைந்திருக்காது.

சமுதாயத் துறையில் பின்தங்கி அறியாமை படுகுழியில் வீழ்ந்து கிடக்கும் எந்த நாடு சுதந்திரம் பெற்றாலும் அது பாலைவனத்துச் சோலையாகவே இருக்கும்! எனவே தான் நாம் சமுதாயத் துறையிலே முதல் கவனம் செலுத்த ஆரம்பித்தோம்.

அன்று சிலர் நம்மை பார்ப்பனத்துவேஷிகள் என்று கூறி வந்தார்கள்! அவர்கள் கூட நாம் சொல்லுவது சரிய என்று ஒப்புக் கொள்ளத் தலைப்பட்டு விட்டார்கள்! பார்ப்பனர்கள், பஞ்சமர்கள், நாயுடு, நாயக்கர், முதலியார் எல்லாம் மறையத் தலைப்பட்டு—எல்லோரும் மனிதர்களாகிக் கொண்டு வருகிறார்கள்! நம்முடைய கோரிக்கை நியாயமானது, நேர்மையானது என்பதை பல பார்ப்பன இளைஞர்கள் ஒப்புக்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள்! அதே போல் நாயுடு, அதே போல் நாயக்கர், அதே போல் முதலியார் எல்லோரும் நம் கூடாரத்திலே நுழைய ஆரம்பித்து விட்டார்கள்! இனி வெற்றி வெகு தூரத்தில் இல்லை! மிக அருகில், மிக அருகில் என்பதை நாம் உணர வேண்டும்.

அதை இன்னும் எளிதாக்க, அதை இன்னும் விரைவாக்க கழகத் தோழர்கள் அரும்பாடுபட வேண்டும்.

"இன்னும் பல பேருக்கு நம்முடைய கொள்கைகளை புரிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கவில்லை! நம்முடைய கொள்கைகளை தெரிந்து கொண்டவர்களைக் காட்டிலும் தெரியாதவர்களே அதிகம்" என்று அண்ணா அவர்கள் மாநாட்டில் பேசி இருக்கிறார்.

கழகக் கொள்கைகளை மக்களுக்கு விளக்கிப் பேசுவதில் கண்ணும் கருத்துமாக நாம் இருக்க வேண்டும்! இதற்கு கூட்டம் போட்டுத் தான் சொல்ல வேண்டும் என்பதல்ல அர்த்தம்! நண்பர்களை சந்திக்கும் போது, உறவினர்களைப் பார்க்கு போது, உற்றார்களை காணும் போது நம்முடைய இலட்சியங்களை எடுத்துச் சொல், லாம்.

வீடுவீடாகச் சென்று பெரியவர்களை சந்தித்து, தாய்மார்களைப் பார்த்து, காங்கிரஸ் பக்கம் நிற்கும் ஒரு சில இளைஞர்களைப் பார்த்து நம் நாட்டின் நிலையை விளக்கி—திராவிடம் பிரிய வேண்டிய அவசியத்தைச் சொல்லலாம்! இதில் ஒரு தடவை தோல்வி அடைந்தால், மறுதடவைச் செல்லுங்கள், மறுதடவையும் செல்லுங்கள்! அவர்கள் நம் இலட்சியத்தைப் புரிந்து கொள்ளுகிற வரையில் செல்லுங்கள்!' சலிக்காமல் செல்லுங்கள்! நிச்சயமாக நாம் வெற்றி பெறுவோம்.

"யாருடைய கொடி உயரமாகப்பறக்கிறது என்பதைவிட, யாருடைய கூட்டங்கள் அதிகமாக நடக்கிறது என்பதைவிட—யாருடைய கொள்கையை மக்கள் அதிகமாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்" என்பதிலே நம்முடைய இளைஞர் பந்தயம் போட்டு வேலை செய்ய வேண்டும்.

நம்மைப்பற்றி நாமே எண்ணி பூரிப்படைந்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை—பயனுமில்லை! நாம் வளர்ந்திருக்கிறோம்—ஆனாலும் இந்த வளர்ச்சி போதாது. இன்னும் வளர வேண்டும்.

நம்முடைய தொண்டர்களைப்பற்றி நாம் எண்ணுவதை விட மாற்றார்கள் அதிகமாக எண்ணுகிறார்கள். "திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களா? சூராதி சூரர்கள், வீராதி வீரர்கள்" என்று நினைக்கிறார்கள். அது ஓரளவு உண்மையும் கூட! அந்த உண்மை வேறு எந்த ஊரைக் காட்டிலும் சென்னையைப் பொருத்த வரையில் சரி என்பதை நாம் இந்தத் தேர்தலிலே கண்டிருக்கிறோம்.

(11-ம் பக்கம் பார்க்க)

காங்கிரஸ்காரர்கள்

வஞ்சக வெறி பிடித்த ஈவிரக்க மற்ற ஓர் சர்வாதிகார பாசீச கும்பல்!

தென்னாடு பிரிவது உறுதி, உறுதி!

ஆனால் விடுதலை இயக்கத்திற்கு கால அட்டவணை கிடையாது

பூவிருந்த வல்லியில் அறிஞர் அண்ணாவின் முழக்கம்

அன்புள்ள தலைவர் அவர்களே, அருமைத் தோழர்களே, தாய்மார்களே! நடைபெறவிருக்கின்ற நாடகத்தோடு செங்கற்பட்டு மாவட்டத்திலே நடைபெறுகின்ற இந்த மூன்றாவது மாநாடு



முடிவடைய விருக்கிறது. இந்த மாநாட்டின் இரண்டு நாட்களிலும் இந்த மாநாட்டினை சிறப்பாக நடக்கும்படி செய்து நல்ல சிறப்பைத் தேடித் தந்த உங்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இரண்டு நாட்களிலும் பல பேச்சாளர்கள் நல்ல கருத்துகளையெல்லாம் எடுத்து உங்களுக்கு சொல்லியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் கேட்ட நீங்கள் அதனால் நல்ல பயனை அடைவீர்கள் என்பதைக்கண்டு பெரிதும் மகிழ்ச்சியடைந்திருக்கிறேன்.

"இந்த மாநாட்டில் மிச்சம் ஓரளவுதான் என்று சொன்னார்கள்! என்றாலும் ஒரு புறம் மகிழ்ச்சியடைந்தேன்! மற்றொரு புறத்திலே சற்று மனக்கசப்பும் கவலையும் அடைந்தேன்!

நம்முடைய கழக மாநாடுகள் செங்கற்பட்டு மாவட்டத்திலே கூட்டப்படுகின்ற நேரத்திலெல்லாம் சாதாரணமாக காஞ்சிபுரத்திலேதான் கூட்டப்படுவது வழக்கம். இதற்குக் காரணம் காஞ்சிபுரம் செங்கற்பட்டுக்கு அருகில் இருப்பதும், காஞ்சிபுரத்தைச் சுற்றி பல சிற்றூர்கள் இருப்பதுமேயாகும். காஞ்சிபுரத்திலும், காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள சிற்றூர்களிலும் உள்ள மக்கள் அனைவரும் கழகத்திடம் பற்று வைத்திருப்பதேயாகும் அதனால் அந்த இடத்தில் மாநாடு நடத்துவதுதான் லாபகரமானதாக இருக்கும். இப்படி நாம் காஞ்சிபுரத்திலேயே மாநாடு நடத்தப்பட்டு வந்ததைக் கண்ட மாற்றார் இவர்கள் எதற்கெடுத்தாலும் காஞ்சிபுரத்திற்குத்தான் செல்வார்கள். இவர்களை பூவிருந்தவல்லிக்கோ, ஸ்ரீபெரும்புதூருக்கோ வரவிடுவோமா, நுழையவிடுவோமா, இந்த இடத்திற்கு வரவிடமாட்டோம் என்றெல்லாம் மாற்றுக் கட்சியினர் எக்காளமிட்டனர்! நம்முடைய கழகத தோழர்களுக்கும் ஓரளவு ரோஷ உணர்ச்சி பிறந்தது! மாநாட்டை பூவிருந்தவல்லியிலே நடத்த வேண்டுமென்று தோழர்கள் எல்லாம் வற்புறுத்தி வந்தனர். நானும் சரி என்றேன். பூவிருந்தவல்லியிலே மாநாடுகூட்டுவதென்று முடிவு செய்தோம். அந்த நேரத்திலேதான் புதுவையிலே தோல்வியடைந்தோம்.

ஒரு பக்கத்திலே பூவிருந்தவல்லியிலே மாநாடு கூட்டுவதென்ற முடிவு. மறுபக்கத்திலே புதுவையிலே தோல்வி! கத்தியும் கையுமாக உள்ள காங்கிரஸ்காரர்கள் "இந்த மாநாட்டை நடத்த விடுவதா? நடவாது, நடவாது" என்றும், முடிந்தால் மாநாட்டு பந்தலையே கொளுத்தி விடுவதென்றும் திட்டமிட்டார்களாம்.

நாம் கூட்டங்களிலே பேசினால் நம்பேச்சாளர்கள்பேசும்பேச்சை ஒரு வார்த்தை கூட விடாமல் எடுப்பதற்கு சர்க்காரிலிருந்து ஒற்றர்கள் அனுப்பப்படுகிறார்கள். நாம் பேசுவதில் பலாத்காரத்தைதூண்டும்படியான பேச்சு இருந்தால் உடனே சர்க்கார் நம் மீது வழக்குப் போட வாய்ப்பு இருக்கிறது.

ஆனால் காங்கிரஸ்காரர்கள் பேசும் கூட்டங்களுக்கு ஒற்றர்கள் அனுப்பப்படுவதில்லை. அவர்கள் என்ன வேண்டுமானாலும் பேசலாம். பலாத்காரத்தைத் தூண்டலாம், பந்தலை கொளுத்தி விடப் போவதாக சொல்லலாம். இதன் காரணமாக இந்த மாநாட்டிற்கு பாதுகாப்புச் செலவு அதிகம் தான் என்று சொல்ல வேண்டும்!

காங்கிரஸ்காரர்கள் பந்தலை கொளுத்திவிட வேண்டுமென்று தூண்டிவிட்டுள்ளார்கள் என்று கேள்விப்பட்ட நேரத்திலே நான் சிறிது ஐயப்பாடு கொண்டேன்! முதன் முதலாக ஒரு அம்மையாரை இந்த மாநாட்டிற்கு தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொண்டோம். அந்த அம்மையாரும் அதற்கு ஒத்துக்கொண்டார்கள். அவர்களுக்கு ஏதாவது விபரீதம் நடந்துவிட்டால் என்ன செய்வது என் கவலைப்பட்டேன்! இந்த காரணத்தால் அந்த அம்மையார் தலைமையுரை ஆற்றிய உடனே அந்த அம்மையாரையும், மற்ற தாய்மார்களையும் அனுப்பி விட்டு "இந்த மாநாடு உனக்கா எனக்கா என்று ஒரு கை பார்த்தே விடுவது என்று தீர்மானித்திருந்தேன்! தலைமை வகித்த அந்த அம்மையார் ஆணித்தரமான தலைமையுரையைக் கேட்டவுடன் எனக்கிருந்த அச்சமெல்லாம் போய் என்னுடைய மதியீனத்தை எண்ணி நானே வெட்கப்பட்

(4-ம் பக்கம் பார்க்க)

நம்மைப் பற்றி அறிந்தவர்கள் குறைவு ! அறியாதவர்கள் அதிகம் !

அறியாதவர்களுக்கு நாம் அறிவிக்க வேண்டும் !

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டேன்! நாம் தான் நம்முடைய வழக்கமான சந்தேகத்தில் இருந்து கொண்டு இருக்கிறோம் என்று நினைத்துக்கொண்டேன்!

அரசியல் மாச்சரியத்தின் காரணமாக இந்த வட்டாரத்திலே ஒருவர் கத்தியினால்குத்திக் கொல்லப்பட்டார். குத்தியவர் சிறையிலே இருக்கிறார். கத்தியால் குத்திக் கொலை செய்யத் தூண்டியவர் வெளியிலே நடமாடிக் கொண்டிருக்கிறார். இந்த வட்டாரம் அப்படிப்பட்ட வட்டாரம்.

மாநாட்டுப்பந்தலைகொளுத்தத் திட்டம் போடுகிறார்கள் என்ற செய்தியைக் கேட்டவுடன் நான் போலீஸ் அமைச்சர் பக்தவத்சலத்தை சந்தித்தேன். அவரிடம் "எங்கள் மாநாட்டுப் பந்தலைக் கொளுத்துவதற்கு திட்டம் போடுகிறார்களாம். அப்படிக் கொளுத்தினால் மாநாட்டிற்கு வரும்தோழர்கள், தாய்மார்கள், அவர்கள் பெற்றெடுத்த செல்வங்கள்இவர்களுடையகதியெல்லாம் என்ன ஆகும்! இப்படி ஒரு விபரீதம் நடந்தால் அது எங்கு போய் முடியும் என்று கேட்டேன்!

அமைச்சர் பக்தவத்சலம் 'அப்படியா?' என்று ஆச்சரியப்பட்டார்! இதைப்பற்றி விசாரிப்பதாகவும் கூறினார்!

மறுதினம் அமைச்சர் பக்தவத்சலம்—பூவிருந்தவல்லியிலிருந்து வந்த சிலரை விசாரித்ததாகவும், அதெல்லாம் ஒன்றும்கிடையாது என்று கூறியதாகவும், "ஒரு வேளை அவர்களே பந்தலை கொளுத்திவிட்டு நம்மீது பழியை போடலாம்" என்று சொன்னதாகவும் கூறினார்!'இது உண்மை தானா" என்றும் என்னைக் கேட்டார்!

"நாங்களென்ன பைத்தியக்காரர்களா? பத்தாயிரம் ரூபாய் செலவுசெய்து போட்ட மாநாட்டுப் பந்தலை கொளுத்துவது என்பது எங்களுக்கு என்ன அது வேடிக்கையா?" என்று நான் அமைச்சருக்குப் பதில் சொன்னேன்!" நான் சொல்லவில்லை பூவிருந்தவல்லியிலிருந்து வந்தவர்கள்தான் சொன்னார்கள் என்றார்!

மாநாட்டிற்கு எந்தவிதமான குந்தகமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதாகவும் வாக்குறுதி கொடுத்தார்!

அவர் செய்த முயற்சி காங்கிரஸ்காரர்கள் சிலருக்கே மனக்கசப்பு ஏற்பட்டதாகவும் தெரிகிறது. அமைச்சர் பக்தவத்சலத்திற்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வட்டாரத்திலே முன்னர் ஒரு தடவை ஒரு போலீஸ் அதிகாரியே இரும்பு வளையத்தால் தாக்கப்பட்டார், போலீஸ் அதிகாரியையே இரும்பு வளையத்தினால் தாக்கினால் கூட தப்பித்துக் கொள்ளலாம் என்ற அளவுக்கு தைரியம் படைத்தவர்கள் இந்த வட்டாரத்து மக்கள்! இரும்பு வளையத்தால் தாக்கப்பட்ட அந்த போலீஸ் அதிகாரி கூட இங்கே வந்திருப்பதாகக் கேள்விப் பட்டேன்.

"இந்த மாநாட்டிற்கு வந்திருக்கும் மக்களை உற்று உற்றுப் பார்க்கிறேன். அதிலே சென்னை நகரத்து மக்களை அதிகம் பார்க்கவில்லை. இந்த மாநாட்டை இங்கே இப்போது கூட்டுவதால் அடுத்த மாதம் சென்னையிலே நடைபெறவிருக்கும் மாநாடு பாதிக்கப்படலாம்என்றுதோழர்கள் கூறினார்கள்!

இந்த மாநாட்டுக்கு சென்னையிலிருந்து அதிகமான மக்கள் வரவில்லை. சென்னையிலிருந்து வந்திருக்கும்தோழர்களும் எங்களது விருந்தாளிகளாகவே வந்துள்ளனர். அவர்களால் இந்த மாநாட்டிற்கு எதும் லாபமுமில்லை!

இந்த மாநாட்டிற்கு தலைமை வகிக்கும் சேது பாஸ்கரன் அம்மையார் ஈரோட்டைச் சேர்ந்தவர்தான் என்றுநீங்கள்எண்ணிக் கொண்டிருப்பீர்கள்! உங்களில் பலருக்குத் தெரியாது! அவர் ஈரோட்டிலே உள்ளவரானாலும் அவர் பிறந்து வளர்ந்தது எல்லாம் எங்கள் காஞ்சிபுரத்திலே தான் என்று சொல்லிக் கொள்வதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்! ஈரோட்டிலே அடி எடுத்து வைத்தாலே அரசியல் வாடை வீசும், காஞ்சிபுரத்திலே புகுந்தால் புகழ் மணக்கும். அந்த அம்மையார் ஆற்றிய தலைமையுரை எவரையும் திகைக்க வைக்கும் அளவுக்கு இருந்ததென்றே சொல்லவேண்டும்!

அந்த அம்மையார் ஆற்றிய சொற்பொழிவு என்னையும்கூட திகைக்க வைக்கும் அளவுக்கு இருந்தது. அந்த அம்மையார் ஈரோட்டிலே பிரசித்தி பெற்ற ஒரு மருத்துவர்! மருந்து கலக்கிக் கொண்டே எப்படி இந்த அம்மையார் இந்த அளவிற்கு அரசியல் அறிவு பெற்றார்களென்றும், எப்படி இவ்வளவு புள்ளிவிவரங்களை சேகரிக்க முடிந்ததென்றும் நான் ஆச்சரியப்பட்டேன்.

அடுத்தபடியாக மாநாட்டினை ஆரம்பித்து வைத்த ராஜேஸ்வரி அம்மையார் கூட மாநாட்டிலே பேசுவது இதுதான் முதல் தடவையாகும். ஆனாலும் அவர்கள் பேசிய பேச்சு தோழர்களுக்கு நல்ல உற்சாகத்தை அளித்துள்ளதென்றும், அந்த பேச்சிலே உள்ள கருத்துகள் மக்களுக்கு பல்லாண்டு காலம் பயன்படும் என்றும் கருதுகிறேன்.

இந்த மாநாட்டிலே ஏதோ ஒருமாய உணர்ச்சி ஏற்பட்டிருப்பதாகவே நான் கருதுகிறேன். இந்த மாநாட்டிலே பேசிய எல்லாத்தோழர்களும் போராட்டத்திற்கு தயாராக உள்ளதாகவும் அதற்கான கட்டளையை என்னிடமிருந்து எதிர்பார்ப்பதாகவும் கூறினார்கள், போராட்டத்திற்கு தடையாக நான் உள்ளதாகவும் கூறினார்கள்.

உள்ளபடியே போராட்டம் வருமானால் அதைத் தடுத்து நிற்பவன் அல்ல நான். போராட்டம் தேவை என்ற நினைக்கின்ற நேரத்திலே என்னுடைய குரலுக்குப் பஞ்சமிருக்காது.ஆளுக்குப் பஞ்சம் ஏற்படாமல்நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்!

இங்கு பேசியவர்கள் அனைவரும் அண்ணாவின் சுட்டு விரலை அசைத்தால் உடனே போராட்டத்திலே இறங்குவோம் என்று—ஒரு கையிலே வாளும், ஒரு கையிலே வேலும் ஏந்திக்கொண்டிருப்பவர்களைப் போலப் போராட்டத்திற்கு சட்டளை இடுமாறு என்னைக் கேட்டனர்! இப்படி அவர்கள் கூறுவது என்மீது பழியைப் போட்டுத் தப்பித்துக் கொள்ளலாமென்று நினைக்கிறார்கள் போலும்!

நாம் போராட்டங்களைத் தேடிக் கொண்டு செல்லும் அளவுக்கு அரிப்பு எடுத்தவர்கள் அல்ல! போராட்டங்கள் நம்மை தேடிக் கொண்டு வரும்! திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு ஜனநாயக அமைப்பு! நாட்டுப் பிரிவினை என்ற எந்த இலட்சியத்தை வைத்துள்ளோமோ அதற்காக நாம் பாடுபட்டு கொண்டு வருகிறோம்!

நாம் எந்த இடத்திலிருந்து வந்தோமோ அந்த இடத்திற்கும் ஜனநாயகத்திற்கும் உள்ள தொடர்பு எட்டி என்று சொல்லலாம், வேம்பு என்று சொல்லலாம்! எட்டியும் வேம்பும் என்று சொல்வதாலே உதவாதது என்று நினைத்து விடக்கூடாது. எட்டியும், வேம்பும் மருந்தாக உபயோகப்படும்! ஆனால் அதை எந்த நேரத்தில் எப்போது தேவையோ அப்போது தான் உபயோகப்படுத்த வேண்டும்.

"போராட்டத்திற்கு நாள் கொடுங்கள் நாள் கொடுங்கள் தேதி குறிப்பிடுங்கள்" என்று கேட்கிறீர்கள். நான் தேதியோ நாளையோ சொல்லாமல் இருப்பதற்கு காரணம் போராட்டத்திற்கு நாள் குறிக்க வேண்டுமென்றால் அது நான் ஒருவன் மட்டுமே செய்துவிடக் கூடியது அல்ல! அந்த விஷயத்தை பொதுக் குழுவில் வைக்க வேண்டும். இதைப் பற்றி வாதம் நடத்த வேண்டும், அப்போது கருத்தோடு கருத்து மோதும். அறிவோடு அறிவு மோதும். அதன் பின்னர் முடிவு செய்ய வேண்டும் அக்டோபர் 6-ந் தேதியா 4-ந் தேதியா என்று.

நாம் இருந்த இடத்தைப் பார்த்து சலித்துப் போய் விட்டோமா? அல்லது முடிவெடுப்பதற்கு பயப்படுகிறோமா? நாம் போராட்டமென்றால் அஞ்சி ஓடி ஒளிபவர்களல்ல!

நண்பர் நைனாமுகம்மது அவர்கள் மிக்க உணர்ச்சியோடும், ஆத்திரத்தோடும் பேசியதை நாம் இப்போது பார்த்தோம்! அவருடைய உள்ளத்தில் எவ்வளவு உணர்ச்சி இருந்தது என்பதை நாம் அவருடைய பேச்சிலிருந்தே காணமுடிகிறது!

இத்தனைக்கும் தோழர் நைனாமுகம்மது அதிக நாள் அரசியலிலே ஈடுபட்டவரா என்றால் கிடையாது! அவருக்கு அரசியலிலே உள்ள அனுபவம் மிகக் குறைவு. அவருக்கு ஏற்பட்ட அரசியல் அனுபவமெல்லாம் எப்போதென்றால்நேரு சென்னைக்கு வந்த போது கறுப்புக் கொடி காட்டினோமே அப்போது தான்!

நைனாமுகம்மது நமது கழகத் தோழர்கள் கறுப்புக் கொடி காட்டிய பக்கம் சென்று கொண்டிருந்தார்! அப்போது இவரை போலீசார் துரத்த ஆரம்பித்தார்கள்!

அப்படித் துரத்திப் பிடிக்கச் சென்ற நேரத்தில் இவர் வேலியைத் தாண்டி ஓட, தன்னைப் பிடிக்கு முன்னே வேலியைத் தாண்டி ஓடி விட வேண்டுமென்று எத்தனிக்க, போலீசார் இவர் வேலியைத் தாண்டு முன்னே தாக்கிப் பிடிக்க வேண்டுமென்றுஎத்தனித்து குண்டாந்தடியால் இவரது கையிலடிக்க இவரது கைக்கெடிகாரம் உடைந்து விழவும். இவரது கையில் காயமேற்படவும் சேர்ந்தது. இப்படிப்பட்ட அனுபவத்திற்குப் பின்னரே இவர் அரசியல் அறிவு பெற்றார். இரண்டு ஆண்டு காலத்திற்கு முன் இவருக்கு என்ன தெரியுமென்று கேட்டால் அண்ணாதுரை என்று ஒருவர் இருக்கிறார். அவர் நல்லவர் என்பது தான் இவருக்குத் தெரியும். கறுப்புக் கொடி கிளர்ச்சி தான் இவருக்கு அரசியலைக் கற்றுக் கொடுத்தது.

நீங்கள் எல்லோரும் அரசியலில் நான் ஒரு சட்டாம்பிள்ளை என்று கருத வேண்டுமே தவிர என்னையே ஆசானாகக் கொள்ளக் கூடாது! நான் எப்போதுமே ஆசானாக இருக்க விரும்பாதவன்!

"நான் மும்முனைப் போராட்டம் ஆரம்பித்த நேரத்திலே அந்தப் போராட்டத்திற்கு அந்த அளவுக்கு ஆதரவு இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. நாங்கள் சிறையிலே தள்ளப்பட்டிருந்தோம். நாங்கள் வெளியே இருந்திருந்தால் எந்த அளவுக்கு போராட்டம் வலுப்பெற்றிருக்குமோ அதை விட அதிகமான அளவுக்கு போராட்டம் வலுப்பெற்றிருந்தது என்றே சொல்ல வேண்டும்.

நாம் போராட்டம் நடத்தினால் ஒவ்வொரு சிற்றூரிலிருந்தும் ஆடவரும், தாய்மார்களும், இளைஞர்களும் ஈடுபடுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

நம்முடைய தோழர்கள் அனைவருக்கும் உள்ளத்திலே உள்ள உணர்ச்சி ஒரு அசைக்க முடியாத உணர்ச்சி. நம்முடைய நாடு நமது என்ற உணர்ச்சி ஒவ்வொரு தோழரது உள்ளத்தின் அடித்தளத்திலே ஏறி விட்டது. அந்த உணர்ச்சியை எப்படியாவது கிள்ளி எறிய வேண்டும்

(9-ம் பக்கம் பார்க்க)

உலக மேதை சுப்பிரமணியத்தின் ஆட்சியைப் பாரீர்!

"அண்ணாதுரைக்கு ஆளத் தெரியுமா" என்று கேட்டவரின் திறமையைக் கேளீர்!

கிராம அதிகாரிகள் மோசடி செய்தது!

2,18,95,163

தமிழ்க்கலைக் களஞ்சியத்தில் நாசமானது!

4,00,000!

பஸ்டிக்கட் அடித்ததில் அரோகராவானது!

37,000

படகு கட்டும் கருவி வாங்கியதில் கோவிந்தாவானது!

71,000

உல்லாச வண்டி வாங்கியதில் நஷ்டம்!

9,000

சென்னை மாநிலத்தைக் கட்டி ஆண்டு கொண்டுவரும் நமது முதலமைச்சர் காமராஜரும் மதிப்பிற்குரிய உலக மேதை நிதி அமைச்சர் சுப்பிரமணியமும் நாள் தவறாமல், மணி தவறாமல் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் திட்டிக்கொண்டே காலத்தைக் கழித்து வருகிறார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தை இவர்கள் திட்டுவதால் நாம் கவலைப்படப் போவதில்லை! திட்டட்டும்! நன்றாகத் திட்டட்டும்! ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் திட்டுவதற்கு முன்பு தங்களைப் பற்றியும் புரிந்து கொண்டு திட்டட்டும் என்று தான் சொல்லுகிறோம்.

சோம்பேறியைப் பார்த்து உழைப்பவன் திட்டலாம். ஆனால் சோம்பேறி உழைப்பவனைப் பார்த்துத் திட்டினால் உலகம் நையாண்டி செய்யும், கேலிச் சிரிப்பொலியை உதிர்க்கும்.

பரீட்சையில் தோற்றுவிட்டு, தாய், தந்தையர்களுக்கு பயந்து தூக்குக் கயிறை முத்தமிடப் போகும் உதவாக்கரை மாணவனைப் பார்த்து வெற்றி பெற்ற மாணவன் பரிகாசம் செய்யலாம். "முட்டாளே. இரவு முழுதும் ஊர் சுற்றி வந்தாயே! அதன் பலனை இன்று அனுபவிக்கிறாய்" என்று நக்கல் செய்யலாம்! ஆனால் படித்துப் பரீட்சையில் தேறி வெற்றி வாகை சூடிய மாணவனைப் பார்த்து - பரீட்சையில் கோழி முட்டையைப் பரிசாகப் பெற்ற மாணவன் — "ஏ மூடா! ஒன்றும் தெரியாத உதவாக்கரையே! உனக்கு பள்ளிக்கூடம் என்றால் அர்த்தம் தெரியுமா?" என்று கேட்டால் சமுதாயம் அவனை என்ன சொல்லும்? "பைத்தியக்காரன், அதிகமாகப் பேசாதே, உன் துணியை கிழித்துவிடப் போகிறான்" என்று தான் நல்லவர்கள் சொல்லுவார்கள்! ஆனால் நம்மையே ஆளும் நம்முடைய மந்திரிகள் இப்படி நடந்து கொண்டால் நாம் வாயைத் திறக்க முடியுமா? வாயைத் திறந்தால் போலீஸ், துப்பாக்கி சிறை இவைகள் தானே நமக்குப் பரிசாகக் கிடைக்கும்?

"உலகத்திலேயே தன்னைப் போல் ஒரு மேதை இது வரையில் பிறக்கவில்லை, பிறக்கப் போவதும் இல்லை" என்ற தோரணையிலே நமது நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் பேசி வருகிறார்! காமராஜரும் அவருக்குத் துணையாக நின்று வருகிறார்!

"அண்ணாதுரைக்கு என்ன தெரியும்? ரோமாபுரி ராணி எழுதுவார்!"

"புள்ளி விபரம் தெரியுமா?"

"சர்க்காரை நடத்தத் தெரியுமா?"

"திட்டம் தீட்டத் தெரியுமா?"

"பட்ஜட் போடத் தெரியுமா?"

"நாட்டை ஆளத் தெரியுமா?"

"மந்திரி நாற்காலியில் உட்காரத் தெரியுமா?"

"செகரட்டரியைக் கூப்பிடத் தெரியுமா?"

"இலாகாக்களைப் பிரிக்கத் தெரியுமா?"

"அந்தந்த அதிகாரிகளுக்கு உத்திரவு போடத் தெரியுமா?"

"இன்னென்ன காரியத்திற்கு இவ்வளவு இவ்வளவு செலவு செய்ய வேண்டும் என்பதை அறிவாரா?"

'திட்டங்கள் கேட்டால் கசாப்புக் கடை வைக்கச் சொல்லுவார்?"

"இதுவும் ஒரு திட்டமா?"

"காடாள்வது சினிமாவுக்கு வசனம் எழுதுவது அல்ல!"

"சினிமாவில் செட்டுகளைப் போட்டு மலையைக் காட்டுவது போல, மடுவைக் காட்டுதுபோல, அணையைக் காட்டுவது போல, ஆற்றைக் காட்டுவது போல, சோலையைக் காட்டுவது போல, சொகுசு வாழ்க்கையைக் காட்டுவது போல நாட்டையும் சுபீட்சமாக்கி விடலாம் என்று நினைக்கிறார்!"

'இது சிறு பிள்ளைத்தனமானது! நாடாள பயன்படாது!"

"அறிஞராமே! அண்ணாவாமே! அடுக்குமொழியாமே!"

என்றெல்லாம் நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் கிண்டல் செய்து தன்னை ஒரு மேதையாக்கிக் கொண்டு வருகிறார்! சில பொடியன்களை வைத்துக் கொண்டு நாள் தவறாமல் கதையளந்து கொண்டு வருகிறார்! அவர்களும் கைதட்டுகிறார்கள்! நமது மேதைக்கோ உச்சி குளிர்ந்து விடுகிறது! கொஞ்சம் கண்ணாடியைத் துடைத்துப்போட்டுக் கொண்டு, முகத்தைச் சுளித்துக்கொண்டு — தன்னை ஒரு சர்ச்சில் அட்லி என்று நினைத்துக் கொண்டுமீண்டும் பேச ஆரம்பிக்கிறார். அண்ணாதுரையை அழைக்கிறேன். அவர் வந்து ஆலோசனை

[8-ம் பக்கம் பார்க்க]

சுடுகாட்டுச் சாம்பல்

பி. எஸ். இளங்கோ

அத்தியாயம் 11.

'வாங்க, வாங்க'' என்று அருமைநாயகம் வந்த பெரிய மனிதர்களை யெல்லாம் முன் வாசற்படியிலே நின்று கொண்டு வரவேற்றுக் கொண்டிருந்தார்!

''போலீஸ் அதிகாரி அருமை நாயகத்து வீட்டுக் கல்யாணம் என்றால் கேட்க வேண்டுமா? பந்தல் ஒன்றே பத்தாயிரம் பெறுமே'' என்று ஒரு பெரிய மனிதர் இன்னொரு பெரிய மனிதரிடம் பேசிக் கொண்டிருந்தார்!

''என்ன வேலைப்பாடு, என்ன வேலைப்பாடு'' மணவரையின் கவர்ச்சியைப் பற்றி இன்னொரு பெரிய மனிதர் வேறொரு பெரிய மனிதரிடம் புகழ்ந்துப் பேசிக் கொண்டிருந்தார்!

''அருமைநாயகம் மகா அதிர்ஷ்டசாலி! யாருக்கு கிடைக்கும் இதுபோன்ற சம்பந்தம்'' என்று சிலர் பொறுமைப் பெரு மூச்சு விட்டுக் கொண்டிருந்தனர்!

''அருமைநாயகத்திடம் இனி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், வருங்கால மந்திரியை மாப்பிள்ளையாகப் பெற்றுவிட்டதால் தலை தன்னாலே ஆட ஆரம்பித்து விடும்'' என்றும் சிலர் பேசிக் கொண்டிருந்தனர்!

''மாப்பிள்ளை வந்தாச்சு! பெண்ணை அழைத்துக்கொண்டு வாருங்கள், நேரமாச்சு'' என்று புரோகிதர் உரக்கக் கூவிக் கொண்டிருந்தார்!

மேளவாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருந்தன! மாப்பிள்ளை சுந்தரம் சிரித்த முகத்துடன் மணவரையில் வந்து உட்கார்ந்தான்!

'பெண்ணை அழைத்துக் கொண்டு வாருங்கள், பெண்ணை அழைத்துக் கொண்டு வாருங்கள்'' என்று மீண்டும் புரோகிதர் கத்த ஆரம்பித்தார்!

''போடி! கசக்குதோ! எனக்கு இந்த மாதிரி மாப்பிள்ளை கிடைத்தால் மூன்று தரம் தாலி கட்டச் சொல்லி கழுத்தைக் காட்டுவேன்'' என்று பரிகாசம் செய்தாள் ஒரு தோழி!

வேல்விழி எதற்கும் ஒன்றுமே பதில் சொல்லவில்லை!

பொட்டு பொட்டாக வீழ்ந்துக் கொண்டிருந்த கண்ணீர் திட்டுத் திட்டாக கன்னத்தில் வீழ்ந்து சிதறி ஓடிக் கொண்டிருந்தன!

அருமைநாயகம் தன் செல்ல மகளை சமாதனப்படுத்தி அழைத்துக் கொண்டு வந்தார்! வேல்விழி தள்ளாடி தள்ளாடி, கால்கள் பின்ன, பின்ன மணவரையில் வந்து அமர்ந்தாள்!

சுந்தரம், மணவரையில் தன்னுடன் உட்கார்ந்திருந்த வேல்விழியை முறைக்க முறைக்கப் பார்த்துக் கொண்டே இருந்தான்! வேல்விழி குனிந்த தலையை நிமிர்த்தாமலேயே உட்கார்ந்து கொண்டிருந்தாள்! ஐயர் வளர்த்த அக்கினிஓம குண்டத்தில் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது—வேல்விழியின் உள்ளத்தைப் போல!

''கெட்டி மேளம்! கெட்டி மேளம்'' புரோகிதர் உரக்கக் கூவினர்! பெரியவர்கள் அனைவரும் அட்சதையை வாரி வாரி இறைத்துக் கொண்டிருந்தனர்! சுந்தரம் மஞ்சள் கயிறு இணைத்த தங்கத் தாலியை வேல்விழியின் கழுத்திலே கட்டி விட்டு நிமிர்ந்து பார்த்தான்! அந்தப் பார்வையில்தான் எவ்வளவு வெற்றி முழக்கம்!

வேல்விழி சுந்தரத்திற்கு மனைவியாகி விட்டாள்! இல்லை, இல்லை—மனைவியாக்கப்பட்டு விட்டாள்!

''வேல்விழியின் உள்ளத்திலே கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த ஆசைக் கனல் எல்லாம் வெந்து தணிந்து ஒரு பிடி சாம்பலாகிவிட்டது! ''பணம்! பணம்! இதற்கெல்லாம் காரணம் பணம்! பணம்!'' என்று தனக்குள்ளேயே சுந்தரம் மகிழ்ந்து கொண்டிருந்தான்!

''இந்தப் பணம் இல்லா விட்டால் நான் வேல்விழியை அடைய முடியுமா? பணம் பாதாளம் வரை பாயும்'' என்று அவனது இறுமாப்புப் பார்வை தெள்ளத் தெளிய எடுத்து விளக்கிக் கொண்டிருந்தது!

ஆனால் உண்மைக் காதலை பணம் கொடுத்து விலைக்கு வாங்க முடியுமா?

வேல்விழியின் இதயத் திரையிலே தீட்டப்பட்டிருந்த அந்த அழகு ஓவியம் சிதைக்கப்பட்டு விடுமா?

உள்ளக் கோயிலிலே வைத்து நித்தம், நித்தம் ஆராதனை செய்து வந்த அந்தத் தங்கச் சிலை உடைக்கப் பட்டு விடுமா?

இந்த கேள்விகளுக்கெல்லாம் காலம் தான் பதில் சொல்ல வேண்டும்!

அத்தியாயம் 12.

மணக்கும் முல்லையால் அலங்கரிக்கப்பட்டிருந்த அந்தக் கட்டிலில் சுந்தரம் உட்கார்ந்து கொண்டிருந்தான்! பக்கத்திலே பாலும் பழமும் வைக்கப்பட்டிருந்தன! சுந்தரத்தின் உள்ளத்லே கொள்ளை ஆசை!

'பழத்தைத் தருவாள்—அந்தப் பழம் வேண்டாம்—இந்தப் பழம் தான் வேண்டும் என்ற அவள் கன்னத்தைத் தட்டிக் காட்டுவேன்'' என்று தனக்குள்ளேயே நினைத்துக் கொண்டு உற்சாகப் பெரு வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தான்!

''பாலைத் தருவாள்—பசும் பாலைத் தருவாள்—'' இந்தப் பாலை நமக்குப் பிறக்கப் போகும் பையனுக்குக் கொடு'' என்று கேலி செய்து விட்டு அவளை வாரி அணைத்துக் கொள்ளுவேன்'' என கனவு உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தான்!

வேல்விழி அந்த அறையின் ஓரத்திலே, ஒரு மூலையிலே தலை குனிந்தபடியே விக்கி விக்கி அழுது கொண்டிருந்தாள்!

''முதலிரவு அல்லவா! நாணத்தால் நிற்கிறாள் போலும்'' என்று சுந்தரம் நினைத்துக் கொண்டு அவள் அருகே சென்றான்!

''என்ன வேல்விழி! ஏன் இங்கே நிற்கிறாய்?''

''என்ன வேல்விழி? ஏன் அழுகிறாய்?''

''என்ன வேல்விழி? ஏன் கண் சிவந்திருக்கிறது?''

சுந்தரம் கேள்வி மேல் கேள்விகளை அடுக்கிக் கொண்டே இருந்தான்!

வேல்விழி எதற்குமே பதில் சொல்லவில்லை! குனிந்த தலையும் நிமிர்த்தவில்லை!

'வேல்விழி! அதோ பார்! பெண்களோடு விளையாடும் அந்த கண்ணனை! எத்தனை இன்பத்தை அனுபவிக்கிறார்கள்!! சுவற்றில் மாட்டியிருந்த படத்தைக் காட்டி காம போதை ஊட்டினான் சுந்தரம்!'

''வேல்விழி! இதோ பார் இந்தப் படத்தை! கோதண்டராமன் வில்லை முறித்தவுடன் சீதையின் உள்ளமும், உடலும் அவள் அங்கமும் எவ்வளவு கனத்துவிட்டிருக்கின்றன! இது

உனக்கு இன்பம் ஊட்டவில்லையா?" சுந்தரம் வேல்விழிக்கு காதல் படத்தைச் சொல்லிக் கொண்டிருந்தான்!

"வேல்விழி! இந்த ஓவியத்தைப் பார்த்தாயா? தலை வெளுத்த கிழவனுக்கே இந்த ஆசை என்றால் நமக்கு இருக்காதா?" முருகக் கடவுள் கிழவன் வேடம் பூண்டு வள்ளியின் கையைப் பிடித்து இழுக்கும் காட்சியைக் காட்டி களி நடனத்திற்கு அழைத்துக் கொண்டிருந்தான் சுந்தரம்!

வேல்விழி எதற்கும் பேசவில்லை! குனிந்தத் தலையையும் நிமிர்த்தவில்லை!

"கண்ணல்ல! என் கட்டிக் கரும்பல்ல! கனி இதழைக் காட்டு, மதுரசத்தை அள்ளி அள்ளி குடிக்கிறேன்"! என்று கூறிக்கொண்டே வேல்விழியின் முகவாய்க் கட்டையைப் பிடித்தான்!

"அத்தான்! அத்தான்!" வேல்விழியின் குரல் தானா இது? சுந்தரம் ஒருகணம் திடுக்கிட்டான்—மறு கணம் "இன்பம், இன்பம்" என்று கூத்தாடினான்!

"இதுவரை என்னை விட்டு விட்டு எங்கே அத்தான் போயிருந்தீர்கள்?"

"எங்கேயும் போகவில்லை வேல்விழி! இங்கே தானே இருக்கிறேன்!"

என் அத்தான் பொய் சொல்லுகிறார்!

"உன் அத்தான் எப்போதுமே பொய் சொல்ல மாட்டான் வேல்விழி!"

"உண்மையாகவா அத்தான்!"

"ஆமாம் வேல்விழி, ஆமாம்!"

"என் அத்தான் என்றால் என் அத்தான் தான்!

"என்னைப் போல் உனக்கு ஒரு அத்தான் கிடைப்பானா வேல்விழி!"

'அது எப்படி கிடைப்பார் அத்தான்! என்ன அழகு, என்ன அழகு! சுந்தரன் என்றால் சுந்தரன் தான்!"

"என் பெயரே சுந்தரம் தானே வேல்விழி?"

"சுந்தரமா? என் அத்தான் பெயர் சுந்தரமா? ஏனத்தான் பொய் சொல்லுகிறீர்கள்! உங்கள் பெயர் பாண்டியன்—வீர பாண்டியன், விடுதலை பாண்டியன்!"

"இல்லை வேல்விழி! என் பெயர் சுந்தரன் தான்!

"பாத்தியா? பாத்தியா? மறுபடியும் பொய்சொல்ல ஆரம்பிச்சுட்டீங்களே!"

"பொய்யா? என்ன உளறுகிறாய்? வேல்விழி?"

"நானா உளறுகிறேன்! இந்தப் படத்தில்—நீங்களே பாண்டியன் என்று கையெழுத்துப் போட்டு விட்டு பொய் சொல்லவில்லை என்கிறீர்களே!" வேல்விழி ஒரு படத்தைக் காட்டி அதில் போடப்பட்டிருக்கும் கையெழுத்தையும் காட்டுகிறாள்!

சுந்தரம் திடுக்கிட்டு "யார் இவன்" என்று கூச்சல் போட ஆரம்பித்தான்!

"யாரா? தெரியவில்லை! காலையில் என்னைத் தொட்டுத் தாலிக் கட்டியவன், என் கணவன்! என் ஆசை அத்தான்!"

"என்ன பேத்துகிறாய்?"

"யாரத்தான் பேத்துகிறது! காலையில் கைபிடித்து, மாலையில் நலுங்கு வைத்து, இரவில் இன்பம் பெற வந்திருக்கும் நீங்கள் உளறுகிறீர்களா? நானா?"

"வேல்விழி! உனக்கு பைத்தியம் பிடித்து விட்டதா?" சுந்தரம் உரக்கக் கத்தினான்!

"யாருக்கு பைத்தியம்! பாண்டியா? யாருக்குப் பைத்தியம்?" வேல்விழியும் உரக்கக் கத்தினாள்!

சுந்தரத்திற்கு ஒன்றுமே புரியவில்லை! கட்டிலில் போய் சிறிது நேரம் உட்கார்ந்தான்! "ஏன் இப்படி பேசுகிறாள்! பைத்தியக்காரியைப் போல் பேசுவது எதனால் என்று சிந்தனை செய்த படி கன்னத்தில் கையை வைத்தபடி உட்கார்ந்திருந்தான்!

வேல்விழி சுந்தரத்தின் கையைப் பிடித்து இழுத்து "அத்தான், நான் ஆடட்டுமா? அத்தான் நான் பாடட்டுமா? அத்தான் நான் கொஞ்சட்டுமா?" என்று ஆட ஆரம்பித்தாள்!

"வேல்விழி என்ன இது?" சுந்தரம் ஆவேசம் வந்தவனைப் போல் அதட்டினான்!

"இதுவா? ஆட்டம்! பாட்டம்! கூத்து! தெரியல!"

"ஏ பைத்தியம்! போய் அப்படி உட்கார்!" சுந்தரம் வேல்விழியை கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் கட்டிலில் உட்கார வைத்தான்!

"நான் பைத்தியம் தான்!" என்று கூறிக் கொண்டே கட்டிலில் போடப்பட்டிருந்த முல்லை மலர்களை கசக்கி எறிந்தாள்! சுந்தரத்தின் சட்டையை பல்லால் கடித்து கிழித்தாள்! அங்கு வைக்கப்பட்டிருந்த பால் டம்ளரை எடுத்துத் தூக்கி எறிந்தாள்! "மேளம் கொட்டி, தாலி கட்டி" என்று பாட ஆரம்பித்தாள்!

"ஐயே பைத்தியம், ஐயோ பைத்தியம்" என்று அலறிக் கொண்டு வெளியே ஓட ஆரம்பித்தான் சுந்தரம்!

வெளியே ஓட ஆரம்பித்த சுந்தரத்தைப் பிடித்துக்கொண்டு—"போகாதே, போகாதே என் கணவா—நான் பொல்லாத சொர்ப்பனம் கண்டேன்" என்று பாட ஆரம்பித்தாள்!

சுந்தரத்திற்கு திகிலும், பயமும் வாட்டிக் கொண்டிருந்தது! வேல்விழியைப் பிடித்துத் தள்ளி விட்டு ஓட ஆரம்பித்தான்!

சுந்தரம் வெளியே போனவுடன் கதவை இழுத்து மூடி தாளிட்டாள்! கட்டிலில் போய் உட்கார்ந்தாள்! "சுந்தரம்! நீயா எனக்குக் கணவன்! தொட்டு தாலி கட்டி விட்டால் நீ கணவனாகிவிட முடியுமா? இதோ பாராட என் கணவன்! இவன் உன்னைப் போல் தொட்டு தாலிக் கட்டவில்லை தான்! ஆனால் என் உள்ளத்தைத் தொட்டு, தன் இதயத்தால் தாலி கட்டிய கணவன்! பைத்தியக்காரா! நீ என்னையா பைத்தியம் என்று நினைக்கிறாய்! சரி! அப்படியே நினைத்துக் கொண்டிரு! நானும் என் காரியம் முடிகிற வரையில் பைத்தியக்காரியாகவே இருக்கிறேன்!" என்று தனக்குத் தானே பேசிக் கொண்டிருந்தாள்!

பாண்டியனுடைய புகைப் படத்தை தன் கையில் வைத்துக் கொண்டு தாரை, தாரையாக கண்ணீரை வடித்தாள்! ஹோவென கதறினாள்! அத்தான் உங்களை அடைகிற வரையில் எனக்கு பொட்டுப் வேண்டாம், பூ வேண்டாம், பௌடர் வேண்டாம். சோறு வேண்டாம்!' என்றுகூறிக் கொண்டே தலையில்இருந்த பூவை எடுத்துக் கசக்கி எறிந்தாள்! நெற்றியிலிருந்த பொட்டை அழித்தாள்! பின்னல் போட்டிருந்த கூந்தலை அவிழ்த்து விட்டாள்! "என்று என் பாண்டியனை அடைகிறேனோ அன்று தான் என் தலைக் கூந்தலை முடிப்பேன்" என்று சபதம் செய்தாள்!

பாண்டியனுடைய படத்தை தன் மார்போடு மார்பாய் அணைத்துக் கொண்டாள்! "அத்தான் நமக்கு இன்று தான் முதல்இரவு! என்று முணுமுணுத்துக் கொண்டே சாயந்தாள்! அப்படியே உறங்கியும் விட்டாள்!

அத்தியாயம் 13.

',தங்க பஸ்பம் கலந்த பால் வைத்திருக்கிறேன், பழரசம் வைத்திருக்கிறேன்! சாப்பிடுங்கள்!

"அம்மா! எனக்கு பாலும் வேண்டாம், பழரசமும் வேண்டாம்!"

"தகதக வென்று மின்னிடும் உங்சள் பொன்னிற மேனிக்கு இந்தப் பால் பளபளப்பை அளிக்கும்! இந்தப் பழரசம் உங்கள் இளமையை எரு போட்டு வளர்க்கும்! சாப்பிடுங்கள்!

"அம்மா! எனக்கேன் மின்னும் பொன்னிற மேனி! எனக்கேன் இனி இளமை!

"ஏன் விஸ்வாமித்தராகி விடப் போகிறீர்களா?"

"இல்லை அம்மா! புத்தராகி விடப் போகிறேன்!"

"புத்தர் கூட இல்லற இன்பத்தை அனுபவித்த பின்பு தானே துறவியானார்!"

'எனக்கேதம்மா இனி வாழ்வு?"

"ஏன் அப்படி சொல்லுகிறீர்கள்?"

"கொழுமரம் இல்லாத கொடி படருமா? துடுப்பு இல்லாத படகு கரை சேருமா?"

ரங்கநாயகி அம்மாள் சிரித்தாள்! கலகல வென்று வாய் விட்டே சிரித்தாள்!

"ஏனம்மா அப்படி சிரிக்கிறீர்கள்!" பாண்டியன் ஏதுமறியாத கபடமற்றவன் என்பதை இந்த வினா எடுத்துக் காட்டிற்று!

"இல்லை! வெண்ணெய்யை வைத்துக் சொண்டே நெய் கிடைக்கவில்லை என்று அழுவதை நினைத்தால் சிரிப்புத் தானே வரும்!"

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?"

'பக்கத்திலே பால் இருக்கிறது எடுத்து சாப்பிடுங்கள் என்று சொல்லுகிறேன்"!

"பால் தான் எனக்கு வேண்டாம் என்று சொன்னேனே அம்மா!"

'உங்களுக்குப் பால் வேண்டாம் என்றால் உங்களைப் பால் வேண்டுமெனகிறதே!"

"என்னம்மா! இந்த நேரத்தில் விளையாடுகிறீர்கள்!"

"பின்னே எப்போது விளையாடுவதாம்! இந்த நேரத்தில் விளையாடாமல் இன்னும் பத்து வருடம் கழித்தா விளையாடுவார்கள்!"

"அம்மா! என்ன இது?"

"இதற்குப் பெயர் தான் பருவம், இளமை, உணர்ச்சி என்று உடல் கூறு சாஸ்திரம் கூறுகிறது!"

"அம்மா! நான் நெருப்பு!"

"வாடைக் காற்றால் குளிரும் என் உடலுக்கு அது தானே வேண்டும்" என்று கூறிக் கொண்டே பாண்டியனுடைய கையைப் பிடித்துக் கொண்டாள்!

"ச்சீ" விடு என் கையை" என்று பாண்டியன் உதறித் தள்ளினான்!

"அத்தான்! என்ன ச்சீ என்று சொன்னால் கூட அது இனிப்பாகத் தான் இருக்கும்!"

"அத்தான்! யாருக்கு யார் அத்தான்! அந்த வார்த்தையை சொல்ல வேல்விழிக்கு மட்டும் தான் சொந்தம்!

"இல்லை! வேல்விழிக்கு அப்படிச் சொல்ல இனி உரிமை இல்லை!"

"ஏனில்லை?"

"அந்த உரிமையை அவள் வேறு ஒருவருக்குத் தந்து விட்டாள்!"

"கனவு கண்டாயா?"

"கனவும் காணவில்லை, கற்பனையும்செய்யவில்லை! உண்மை!"

"உண்மை! எது உண்மை?"

"வேல்விழி உன் இதயத்திலிருந்து போய்விட்டதுதான் உண்மை!"

"புரியும்படிச் சொல்லு! என் மனதைக் குழப்பாதே!"

"வேல்விழி சுந்தரத்துக்கு மனைவியாகி விட்டாள்! போதுமா? இன்னும் புரியும்படி சொல்ல வேண்டுமா?"

"வஞ்சகி என்னை ஏமாற்றவா பார்க்கிறாய்?"

"இந்தப் பத்திரிகையைப் பார்த்துக் கேள்—அந்தக் கேள்வியை!" என்று ரங்கநாயகி அம்மாள் வேல்விழியின் திருமண பத்திரிகையை எடுத்துக்கொடுத்தாள்!

(12-பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லட்டும்" என்று சவாலும் விடுகிறார். இதைக் கேட்டுக் கொண்டு சில தும்பறுந்த மாடுகள் துள்ளிக் குதிக்க ஆரம்பிக்கின்றன.

"எங்கள் நிதி அமைச்சர் ஒரே மேடையில் பேசச் சொல்லி உங்கள் அண்ணாதுரையை அழைத்தார். ஏன் வரவில்லை? பேடியைப் போல் ஒளிந்து கொண்டதேன்?" என்று சின்னது முதல் தலை வெளுத்தது முதல் கத்துகிறார்கள்.

கதர் சட்டை அணிந்த உண்யவான்களே! நிதி அமைச்சர் சுப்பிரமணியத்தை கோவைத் திலகம் கொங்கு நாட்டுத் தங்கம், அறிவில் இமயம், ஆற்றலில் இந்து மகா சமுத்திரம், திறமையில் பசுபிக் கடல் என்றுதான் இதுவரை நினைத்து வந்தோம்—உங்களைப் போலவே.

கோவைச் சீயான் தமிழகத்தில் நிதி அமைச்சராக இருப்பதை விட ஆங்கில நாட்டில் நிதி அமைச்சராகப் பணி புரிந்து வந்தால் இவருடைய ஆற்றலும், அறிவும் இன்னும் பெருமை என்று கூட ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தோம். "சென்னையிலிருந்து ஒருவர் நிதி அமைச்சராக இங்குவந்தார் என்ன அறிவு, என்ன அறிவு, என்ன ஆற்றல், என்ன ஆற்றல்" என்று சர்ச்சிலும், அட்லியு புகழ்வார்கள்—அதனால் தமிழகத்தின் புகழ் ஓங்கும் என்றெல்லாம் எண்ணி மனக் கோட்டை கட்டிக்கொண்டிருந்தோம். ஐயோ! குலைத்து விட்டார்கள் நம் ஆசையை, உள்ள நிலையை எடுத்துச் சொல்லி விட்டார்கள்.

இவ்வாண்டு சர்க்காரின் கணக்குகளை தணிக்கை செய்து அறிக்கை விட்டவர்கள் நம்ம நிதி அமைச்சரின் மானத்தை வாங்கியே விட்டார்கள்! தூக்கிப் பேசும் முகம் தொங்கிக் கிடக்கிறது! துடுக்குத்தனமான நாக்கு உள்ளே உள்ளே ஓடி ஒளிகிறது. பாவம். நிதி அமைச்சரின் மூக்கை இப்படி உடைத்திருக்கக்கூடாது.

காந்தி சீடர்களே, உலக மேதையாம் உங்கள் சுப்பிரமணியத்தின் ஆற்றலை, அறிவை, திறமையை சொல்லுகிறோம். அவருக்கு தங்க மெடலை உடல் முழுதும் பூட்டுங்கள்.

ரூ. 71,454

அரோகரா! அரோகரா!

இராணுவத்தாரிடமிருந்து பாலங்கள் கட்டும் வேலைக்காகவும், படகுகளில் பொருத்துவதற்காகவும் "கார்கோ லேட்டர்கள் சிலவற்றை 38,000 ரூபாய்களுக்குவாங்கினார்கள்! அவற்றை சென்னைக்குக் கொண்டுவர 74,962 வரை செலவு செய்தார்கள். இத்தனைத் தண்டச் செலவுக்குப் பின்பும் இது பயன்படாது என்று தெரிய வந்தது. பிறகு இதை விற்றார்கள். விற்ற தொகை எவ்வளவு தெரியுமா? 4651 ரூபாய்தான். கிடைத்தவற்றிலிருந்து மூன்று படகுகளை இணைத்தார்கள். இவற்றில் இரண்டு என்ஜின் இல்லாமல் துறையில் செலுத்தப்பட்டது. ஒன்று பரீட்சார்த்த ஓட்டத்திலேயே தண்ணீரில் மூழ்கி விட்டது. இதன் மூலம் ஏற்பட்ட ரூபாய் 71,454யும் நஷ்ட கணக்கில் எழுதப்பட்டு விட்டது! எப்படி காங்கிரஸ்காரர்களின் திறமை. எப்படி காங்கிரஸ்காரர்களின் ஆற்றல்? அண்ணாதுரைக்கு ரோமாபுரி ராணிதான் எழுதத் தெரியும். இவர்களுக்கு ஊரார் பணத்தை ஓட்டாஞ்சல்லியாக்கி விளையாடத்தான் தெரியும் என்று சொல்லலாம். சொன்னால்...? சொன்னால்...?

ரூ. 37,179

கோவிந்தா! கோவிந்தா!

1955-57-ம் ஆண்டுகளுக்கிடையே சென்னை சர்க்கார் போக்குவரத்து இலாகா ரூபாய் 37,179 செலவில் அச்சடித்த டிக்கெட்டுகளை பயன்படுத்தாமல் பாழ்படுத்தி இருக்கிறது.

மாலைமணி

படைக்கும்

அறிஞர் அண்ணா பொன்விழா சிறப்பிதழ்

இரா. நெடுஞ்செழியன்
கலைஞர் கருணாநிதி
கே. ஏ. மதியழகன்
கே. ஆர். இராமசாமி
எஸ். எஸ். ராஜேந்திரன்

எம். ஜி. ராமச்சந்திரன்
ஈ. வி. கே. சம்பத்
அ. பொ. அரசு
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
வி. பி. ராமன்

ஆகியோரின் சிறப்புரையுடன்

27-9-59 அன்று வெளிவருகிறது!

விலை 16 காசுதான்

அதிக இதழ் வேண்டுவோர் 22-9-59-ம் தேதிக்குள் அறிவிப்பவர்களுக்கு மட்டும்தான் சிறப்பிதழ் அனுப்பப்படும்.

மாலைமணி
சென்னை-14.

எள்ளு! எள்ளு! 9 ஆயிரம் எள்ளு!

உலக மேதை கனம் சுப்பிரமணியத்தை நிதி அமைச்சராகக்கொண்ட சர்க்கார் ரூபாய் 72,374 செலவில் ஓர் உல்லாச வண்டியைத் தயாரித்தார்களாம்! இது 1957 மார்ச் மாதம் முதல் 1958 பிப்ரவரி வரையில் உள்ள 11 மாதங்களில் 49 நாட்கள்தான் ஓடிற்றும். இதன் மூலம் 6,672 மட்டும்தான் சம்பாதிக்க முடிந்ததாம். இதற்கு இவர்கள் செலவு செய்ததோ 14,000 ரூபாயாகும். எனவே இந்த வகையில் ஏற்பட்ட நட்டம் 9 ஆயிரமாகும்.

2,18,95,163 ரூபாய் மோசடி

திறமையின் திருஉருவம் சுப்பிரமணியம் கோலோச்சும் தமிழ் நாட்டில் இரண்டு கோடி ரூபாய்க்குமேல் கிராம அதிகாரிகள் பணத்தை மோசடி செய்திருக்கிறார்கள்: 1957-58-ல் மொத்தம் ரூபாய் 21,18,95,163 வரை கிராம அதிகாரிகளால் கையாளப்பட்டு சொந்த உபயோகத்திற்குபயன்படுத்தி இருக்கிறார்கள்.

4 இலட்சம் தானம்!

"தமிழ்க் கலைக் களஞ்சியம்" தயாரிக்க 1950 முதல் 1957வரை தனிப்பட்ட ஸ்தாபனத்திற்கு சுப்பிரமணியம் வர்க்கத்தைச் சார்ந்த சர்க்கார் மானியம் வழங்கிய தொகை 2,23500 ரூபாயாகும். பொதுமக்களிடத்திலிருந்து பெற்ற நன்கொடைத் தொகை உள்பட சுமார் நான்கு இலட்சம் ரூபாயை அந்த ஸ்தாபனத்தின் பொருளாளர் கையாடி இருக்கிறார்.

ஏழைகளின் பணத்தை வரியாகப் பெற்று. ஏழைகளிடமிருந்து பெற்ற பணத்தை ஒழுங்காக பாதுகாக்கப்படாமல், நியாயமாக செலவு செய்யாமல் வாரி வாரி இறைக்கும் கனம் நிதி அமைச்சர்தான் சொல்லுகிறார் அண்ணாதுரைக்கு நாடாளத் தெரியாது என்று!

ஆம், அமைச்சரே! ஆம்! அண்ணாதுரைக்கு நாடாளத் தெரியாதுதான். உம்மைப்போல் சர்க்கார் கஜானவை காலி செய்து நாடாள தெரியாது தான்.



நமக்கிருக்கும் இந்த வளர்ச்சி அன்று இருந்திருந்தால்

பாகிஸ்தான் பிரிவதற்கு முன்பே திராவிடம் பிரிந்திருக்கும் !

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று மாற்றுக் கட்சியினர் முயற்சி செய்கின்றனர். ஆனால் அந்த லட்சியம் அசைக்க முடியாத லட்சியம். அதை எவராலும் கிள்ளி எறிய முடியாது! நாமிருக்கும் நாடு நமதென்பறந்தோம். இதைச் சொல்லி நாம் நமது நாட்டைக் கேட்கிறோம்!

இங்கு வந்திருக்கும் தாய்மார்களைப் பார்க்கின்றேன். அவர்கள் மாலை வேளையிலே டென்னீஸ் கோர்ட்டுக்கு சென்று பந்தாடும் சீமாட்டிகள் அல்ல! அல்லது இரவிலே, கணவன் வாங்கிக் கொடுக்கிறேன் என்று சொன்ன வைரமாலையை வாங்கிக் கொடுக்காத காரணத்தால் முகத்தை சுளித்துக் கொள்ளுவதைப் போல் பாவனை செய்யும் உல்லாசிகள் அல்ல! எல்லாம் உழைப்பின் பிம்பங்கள்! இவர் கணவன்மார் உழைத்தால் தான் இவர்கள் பிழைத்தார்கள்! இவர்கள் உழைத்தால் தான் இவர்கள் கணவன்மார்கள் பிழைத்தார்கள் என்ற நிலையில் உள்ளவர்கள்! இவர்களில் பலர் கட்டுச் சோறு கட்டிக் கொண்டு வந்துள்ளதைப் பார்க்கும் போதே இவர்களது ஏழ்மை நிலை தெரிகின்றது.

நாம் சார்ந்திருந்த ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி உங்களுக்குப் பலபேருக்குத் தெரியாது என்றே நினைக்கிறேன்!

ஜஸ்டிஸ் கட்சி கூடும் கூட்டமானாலும், மாநாடானாலும் அதற்கு ஆட்களே வரமாட்டார்கள்! கூட்டத்தில் பேசுபவர்கள் கூட கையில் கட்டியிருக்கும் கடிகாரத்தைப் பார்த்து தான் பேசுவார்கள்! அவர்கள் எப்பொதுமே அதிக நேரம் பேசுவதை விரும்பமாட்டார்கள்! ஒரு பதினைந்து நிமிடம் பேசுவதே அவர்கள் அதிக நேரமாக நினைப்பார்கள்!

நான் அவர்கள் கூட்டிய கூட்டத்தில் ஒரு தடவை 45 நிமிடங்கள் வரை பேசினேன்! பக்கத்திலிருந்த பொப்பிலி மகாராஜா என்னைப் பார்த்து "அதிக நேரம் பேசாதீர்கள், சுருக்கமாக முடித்துக் கொள்ளுங்கள்" என்றார்! நான் அவரைப் பார்த்துச் சொன்னேன் — நம்முடைய பிரச்னையை விளக்கமாக எடுத்துச் சொன்னால் தானே புரியும் என்றேன்! அவர் அதற்குச் சொன்னார்— "15 நிமிட நேரம் பேசுவதைப் புரிந்து கொள்ளாதவன் 45 நிமிடம் பேசினாலும் புரிந்து கொள்ள மாட்டான்" என்றார்!

இதனால் அவர்களுக்குப் பண்பில்லை என்று கூறவில்லை! மக்கள் சக்தியின் அருமையை தெரிந்து கொள்ளவில்லை என்று தான் சொல்லுகிறேன்!

இன்று இங்கு கூடியுள்ள ஏழை எளியவர்களையும், நடுத்தர மக்களையும் காண்கிறேன்! என் மனம் இரும்பூதெய்கிறது!

நாவலர் சொன்னார்—நாம் அடுக்கு மொழியிலே பேசுவதாலும் அலங்காரச் சொற் கோர்வைகளை உபயோகப்படுத்துவதாலுமே மக்கள் நமது கூட்டங்களுக்கு வருவதாக மாற்றுக் கட்சியினர் கூறுகிறார்கள் என்று! நமது கூட்டங்களுக்கு வணிகர்கள் வருகிறாகள், வழக்கறிஞர்கள் வருகிறார்கள், உபாத்தியாயர்கள் வருகிறார்கள், உத்தியோகஸ்தர்கள் வருகிறார்கள், அரசியல் தொல்லையிலே ஈடுபட வேண்டாதவர்களெல்லாம் வருகிறார்கள்! உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால் ராஜேஸ்வரி ஷண்முகம் அம்மையாரை சொல்லலாம். இவர் இதுவரை இம்மாதிரி மாநாட்டிலே கலந்து கொண்டதில்லை. அப்படிப்பட்ட அந்த அம்மையாரையும் அரங்கிலே கொண்டு வந்து நிறுத்தி பேச வைத்து விட்டோம்! ராஜேஸ்வரி அம்மையார் உணர்ச்சியோடும், எழுச்சியோடும் உரையாற்றியதையும் நாம் கேட்டோம்!

இதற்கு முன்பெல்லாம் ராஜேஸ்வரி அம்மையார் நாம் உளுந்தூர் பேட்டைக்குச் செல்லும் போது நம்மையெல்லாம் வரவேற்று உபச்சாரம் செய்யும் பணியில் மட்டுமே ஈடுபட்டிருந்தார்கள்! இன்று நமக்கெல்லாம் நல்ல கருத்துப் படையலை வழங்கும் அளவுக்கு வந்திருக்கிறார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்திடம் சேருபவர்கள் எல்லாம் பற்றும் பாசமும் வைத்து சேருபவர்கள். கணவனுக்கு உபசாரம் செய்து கொண்டு இருக்கும் மனைவிமார்கள், திராசு பிடித்து வியாபாரம் செய்து கொண்டு இருக்கும் வணிகப் பெருமக்கள், பேனா பிடித்து எழுதிக்கொண்டு இருக்கும் எழுத்தாளர்கள் எல்லோரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தேடி ஓடி வருகின்றனர் "திராவிட நாடாம், மாநாடாம் அங்கே சென்று பேச்சைக்கேட்கலாம்" என்று மக்கள் ஓடோடி வருகின்றனர்! எங்கள் குரல் உங்கள் காதில் விழுந்த உடனேயே ஓடோடி வருகின்றீர்கள்! இப்படி ஓடி வருவதைக் கண்டு எனக்கு ஒரு பக்கத்திலே மகிழ்ச்சியும், மற்றொரு புறத்திலே மருட்சியும் ஏற்படுகிறது. நீங்கள் ஓடி வருவதைக் கண்டவுடனே எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது! அப்படி வந்தவுடனேயே "திராவிட நாடு என்கிறீர்களே எங்கே அந்த திராவிட நாடு" என்று எங்கே கேட்டுவிடுவீர்களோ என்று மருட்சியும் ஏற்படுகின்றது!

நீங்கள் எல்லோரும் திராவிட நாட்டைப் பற்றி ஐயந்திரிபர விளக்கம் தரும் ஏடுகளைப் படியுங்கள்.

விடுதலை இயக்கத்திற்கு கால அட்டவணை கிடையாது. ரயில் புறப்பட கால அட்டவணை உண்டு. ஆனால் ஒரு விடுதலை இயக்கத்திற்கு கால அட்டவணை என்றுமே இருந்ததில்லை!

ப. உ. சண்முகம் போராட்டத்திற்கு "தேதி தாருங்கள் தேதி தாருங்கள்" என்று கூறினார். "அந்த நாள் எந்த நாளோ என்று கேட்டுக் கொண்டிருந்தார்." அவர் கேட்ட நாள் எந்த நாள் என்று நான் சொல்லும் வரை கூட காத்திராமல் திருவண்ணாமலைக்குப் போய் விட்டார்!

"1947-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பதினைந்தாம் தேதி இரவு பன்னிரண்டு மணிக்கு இந்தியா வெள்ளையன் ஆட்சியிலிருந்து விடுதலை அடையப் போகிறதென்று! எந்த புரோகிதர் நாள் குறித்துத் தந்தார்!

காந்தியாருக்குத் தெரியுமா?

திலகர் உயிலிலே எழுதி விட்டா போனார்?

நேருவிற்கு தெரியுமா?

எவருக்கும் தெரியாது!

இரும்பு பழுக்கக் காய்ச்சப்பட்டது, சம்மட்டியால் அடிக்க வேண்டிய சரியான சமயத்தில் சம்மட்டியால் அடிக்கப்பட்டது. உடனே வளைந்தது. அதுபோலத் தான் இந்தியா சுதந்திரம் அடைவதற்கு வேண்டிய போராட்டம் இரண்டாவது உலகம் போரின் போதே துவக்கப்பட்டது. அது நாளுக்கு நாள் வலுப்பெற்று சமயம் வந்தது. 1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி இந்தியா சுதந்திரம் அடைந்தது.

திராவிட நாட்டிற்கு எப்போது விடுதலை கிடைக்கும் என்று கேட்பதை விட திராவிட நாட்டின் விடுதலைக்காக "நான் என்ன செய்ய வேண்டும், நாம் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்பது தான் சரி. பணமுள்ளவர்கள் பணமாக கொடுத்து உதவி செய்யலாம். பேசத்தெரிந்தவர்கள் தங்களது பேச்சின் மூலம் கொள்கைகளைப் பரப்பலாம், எழுத்தாளர்கள் தங்களது எழுத்தின் மூலம் கழகத்தின் கொள்கைகளைப் பரப்பலாம். போராட்டத்தில் குதிக்க தைரியம் உள்ளவர்கள் போராட்டத்தில் குதிக்கலாம். இப்படி ஒவ்வொருவரும் தங்களுக்கு உள்ள திறனை திராவிட நாட்டின் விடுதலைக்காக காணிக்கையாக செலுத்தலாம்.

நீங்கள் "திராவிட நாடு எப்போது வரும், எப்போது வரும்" என்று கேட்பது எப்படி இருக்கிறது என்றால் ஒரு தாய் ஆறு மாத கர்ப்பிணியாக இருக்கிறாள்! அவளுக்கு நாலு வயதில் ஒரு சிறுமி இருக்கிறாள். அந்த சிறுமி கர்ப்பிணியாக உள்ள தன் தாய் தனியாக இருக்கும் போது தன் தாயைப் பார்த்து அம்மா எனக்கு எப்போது ஒரு தம்பி பிறப்பான் என்று கேட்டால் "இன்னும் நாலு மாதத்தில் ஒரு தம்பி பிறப்பான்" என்று கூறி அனுப்புவாள். ஆனால் அந்தச் சிறுமி தன் தாய் நாலு பேர் மத்தியிலே இருக்கும் போது "எனக்கு தம்பி எப்போது பிறப்பான், எனக்கு எப்போது பிறப்பான் என்று கேட்டால் தாய் என்ன செய்வாள்—அந்த சிறுமியின் கன்னத்தை அன்பாகக் கிள்ளி கன்னத்திலே ஒரு தட்டு தட்டி 'தம்பிபிறக்கிறபோதுபிறப்பான் போய் விளையாடு" என்று தான் சொல்லி அனுப்புவாள்! அது போல நான் தனியாக இருக்கிற நேரத்திலே என்னைப் பார்த்து என்ன அண்ணா திராவிட நாடு எப்போது கிடைக்கும் என்று கேட்டால் "அப்போது கிடைக்கும், இப்போது கிடைக்கும், இன்னும் இத்தனை நாளாகும்" என்றாவது சொல்லுவேன்! அதை விட்டு இத்தனை பேர் நடுவிலே என்னைப் பார்த்து திராவிட நாடு எப்போது கிடைக்கும் என்று கேட்டால் நான் என்ன சொல்வது. அந்த கர்ப்பிணித் தாய் தனது சிறுமியின் கன்னத்தைக் கிள்ளி தட்டி அனுப்பியதைப் போல் நானும் உங்கள் கன்னத்தைக் கிள்ளி தட்டி திராவிட நாடு கிடைக்கிறபோது கிடைக்கும்—போய் உன் வேலையைப் பார் என்று தான் சொல்லி யனுப்ப வேண்டுமென்று நினைக்கிறேன்!

விடுதலைக் கிளர்ச்சி என்பது நாள்குறித்து வைத்துக்கொண்டு நடத்துவதல்ல!

எங்கள் ஊரிலே "அர்ஜுனன் தபஸ்" என்று ஒரு கூத்து நடைபெறுவது வழக்கம். அந்தக் கூத்திலே அர்ஜுனன் வேஷம் போடுபவன் அங்கே இருக்கும் கம்பம் ஒன்றின் மீது ஏறி மேலேயிருக்கும் பாசுபதாஸ்திரத்தை கொண்டு வருவது என்பது வழக்கம்! இப்படி மேலே ஏறி பாசுபதாஸ்திரத்தைக் கொண்டு வரச் செல்பவன் மேலேயிருந்து கொண்டே அவனுக்கு கொடுக்க வேண்டிய பணத்தைப் பற்றிக் கேட்பது வழக்கம், கீழேயுள்ளவர்கள் சும்மாயிருந்தால் அவன் மேலேயிருந்து இறங்காமல் மேலேயே இரவு முழுவதும் உட்கார்ந்து கொண்டிருப்பான்! அவன் பொழுது விடிவதற்குள் கீழே இறங்கி விட வேண்டுமென்பதும், அப்படி இறங்காவிடில் அதனால் ஊருக்கு கேடு விளையும் என்பதும் சாஸ்திரம்! இதனால் பொழுது விடியும் சமயத்தில் கீழேயுள்ளவர்கள் "இறங்கு

(10-ம் பக்கம் பார்க்க)

வெள்ளையன் பண்புள்ளவன்! ஜனநாயகத்தின் மதிப்பை உணர்ந்தவன்!

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

பணம் தருகிறோம்'' என்று கூறுவார்கள்! அப்போதும் அவன் இறங்காமல்'' எவ்வளவு தருகிறீர்கள்'' என்று கேட்பான்! அதற்கு பதில் சொன்ன பிறகு தான் அவன் கீழே இறங்குவான். அதுபோல திராவிட நாடு கிடைக்கின்ற நேரத்திலே கிடைத்துத் தான் தீரும்!

இயக்கத்திலே சேர்ந்துள்ள நீங்கள் திராவிட நாடு கிடைக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள். இதைப் பற்றி நீங்கள் அறிந்து கொண்டு விட்டீர்கள். அதனால் எப்போது கிடைக்கும் என்றுகேட்கிறீர்கள். இதை அறிந்த மக்கள் மிகவும் கொஞ்சம். இதைப் பற்றி அறியாதிருக்கின்ற மக்கள் அதிகம்! அவர்கள் எல்லாம் இதைப்பற்றி அறிய வேண்டும். ஆகையால் அது வரை நாம் காத்திருக்க வேண்டும்! தெரியாதவர்களுக்கு தெரிய வைக்க வேண்டும். அவர்களுக்கு எவ்வளவு தெரிவித்தோம். எத்தனை பேருக்கு அறிய வைத்தோம். அப்படி அவர்களுக்கு அறிய வைக்க முயன்றதில் அவர்கள் மனதில் எந்த அளவுக்கு நின்றிருக்கிறது! இதுவரை நாம் பேசியது அதிகம். ஆனால் மக்கள் அறிந்து கொண்டது மிகவும் குறைவு!

சுயராஜ்யம் பெற்ற பல ஆண்டு காலத்திற்குப் பிறகு சென்ற பொதுத் தேர்தலின் போது குக்கிராமம் ஒன்றில் நடத்திய கூட்டத்தில் வயது முதிர்ந்த பெரியவர் ஒருவர் காந்தியார் சௌக்கியமாக இருக்கிறாரா? அவர் இப்போது எங்கே இருக்கிறார் என்று கேட்டார். இப்படிக் கேட்டது வட ஆர்க்காட்டில் உள்ள ஒரு குக்கிராமத்தில் என்று நினைக்கிறேன்! காந்தியார் இறந்து பல ஆண்டுகளான பிறகு இம்மாதிரியான கேள்வியை ஒருவர் கேட்கிறார் என்றால் அதிலிருந்து எவ்வளவு மக்கள் இன்னும் பூரண அரசியல் அறிவு பெறாதவர்களாக இருக்கிறார்கள் என்பது உங்களுக்கு விளங்கும்.

நமக்குத் தெரிந்த அளவு நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரிந்திருந்தால், அதிகாரம் நம்மிடம் இருந்தால் இன்றைக்கே டெல்லிக்குப் போய் நேருவின் குரல் வளையைப் பிடிக்க முடியுமானால் பிடித்து நங்கள் கேட்கும் திராவிட நாட்டை எப்போது பிரித்துத்தரப் போகின்றீர்கள்—உடனடியாகத் தரப் போகின்றீர்களா இல்லையா என்று கேட்பேன்!

நமக்குத் தெரிந்த அளவிற்கு நாராயணனுக்கு தெரிய வேண்டும், ஏர் பிடிக்கும் எத்திராஜனுக்கு தெரிய வேண்டும், கடையிலே இருக்கும் கந்தசாமிக்கு தெரிய வேண்டும்!

இந்த அளவுக்கு வலிவு மட்டும் ஜஸ்டிஸ் கட்சி காலத்திலே இருந்திருந்தால் பாகிஸ்தான் பிரிப்பதற்கு முன்னதாக திராவிட நாட்டை அடித்துக் கேட்டு வாங்கியிருப்பேன். ஜஸ்டிஸ் கட்சி காலத்தில் இப்படிப்பட்ட மக்கள் சக்தி இல்லை அதனால் தான் ஜனாப் ஜின்னா பாகிஸ்தானை அடித்துக் கேட்டு வாங்கினார்.

வெள்ளைக்காரன் காலத்திலே மட்டும் வாங்கி இருக்க முடியும் என்று சொல்கிற திராவிட நாட்டை இப்போது ஏன் வாங்க முடியாது என்று கேட்கலாம்! வெள்ளைக்காரன் கொடூரமான செயலில் இறங்க மாட்டான். கொடூரமான அடக்குமுறைகளை நீண்ட காலத்திற்கு விட்டு வைக்கவும் மாட்டான்!

வெள்ளைக்காரன் ஜனநாயக உணர்ச்சியை, அறிந்தவன் ஜனநாயகத்தின் மதிப்பை, மகிமையை பெருமையை உணர்ந்தவன்! அரசியலைப் பற்றி நன்கு புரிந்தவன்! மக்களுடைய சக்தி எப்படிப்பட்டது, அது என்ன செய்யும் என்பதை யெல்லாம் நன்கு உணர்ந்தவன்! அதனாலே தான் "அவன் இருந்த காலத்தில் இப்படிப்பட்ட மக்கள் சக்தி நமக்கு இருந்திருக்குமேயானால் திராவிட நாட்டை ஜின்னா பாகிஸ்தான் பெறுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பே பெற்றிருக்கலாம்'' என்று சொன்னேன்!

இப்போது நம்மை ஆண்டு வரும் காங்கிரஸ்காரர்களுக்கு ஜனநாயகத்தின் மதிப்பு தெரியாது! மக்கள் சக்தியின் மகிமையும் புரியாது! இவர்கள் ஈவிரக்கமற்ற பாசிசக் கும்பல்!

கேரளத்திலே நடைபெற்ற கிளர்ச்சியை மக்களின் எழுச்சி என்று கூறினார்கள்!

கேரளத்திலே நடைபெற்ற கிளர்ச்சியை அடக்க நம்பூதிரி பாட் போலிஸ் படையை அனுப்புமாறு ஆந்திர முதன் மந்திரியான சஞ்சீவி ரெட்டியையும், சென்னை முதலமைச்சர் காமராஜரையும் கேட்டார். இதற்கு சஞ்சீவி ரெட்டி எதையோ சொல்லி மழுப்பி விட்டார், எதற்கும் வழக்கமாக ஆகட்டும் பார்க்கலாம் என்று சொல்கிற காமராஜர் கூட எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்து விட்டார்!

இதன் காரணமாக கிளர்ச்சியை அடக்க முடியாமல போய் விட்டது! ஆனால் நம்பூதிரி பாட் கிளர்ச்சியை அடக்க வேண்டுமென்று நினைத்திருந்தால் அடக்கி இருக்கலாம். அவர் ஊரடங்கு சட்டத்தைதை அமுல் செய்திருக்கலாம், கிளர்ச்சிக்குக் காரணமாக இருந்த தலைவர்களை சிறையிலே தள்ளி இருக்கலாம். 144 தடை உத்தரவு சட்டத்தைப் போட்டிருக்கலாம். தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் பனம்பள்ளி கோவிந்த மேனனையும் மன்னத்து பத்மநாபனையும் கைது செய்து காவலில் வைத்திருக்கலாம்.

இப்படி யெல்லாம் செய்திருந்தால் கிளர்ச்சியை அடக்கி இருக்கலாம். ஆனால் இதை யெல்லாம் நம்பூத்ரி பாட் செய்யவில்லை, காரணம் என்ன? வங்காளத்திலே இதே போன்ற கிளர்ச்சி நடை பெற்றது. உடனடியாக பட்டாளத்தை ஏவி இந்தக் கிளர்ச்சியை அடக்கி விட்டது சர்க்கார் வங்காளத்திலே நடைபெற்ற கிளர்ச்சி மட்டும் அடக்கபட்டு விட்டது என்றால் அதற்கு காரணம் அங்கு உள்ள சர்க்கார் காங்கிரஸ் சர்க்கார்!

காங்கிரஸ் கட்சி அதிகாரத்தில் உள்ள இடத்தில் கிளர்ச்சி ஏற்படுமானால் உடனேபோலிசை ஏவி அந்தக் கிளர்ச்சி அடக்கப்பட்டு விடுகிறது! போலிசால் முடியாவிட்டால் இராணுவம் ஏவப்படும். இராணுவத்தால் முடியாவிட்டால் ஏரோப்ளேனிலிருந்து குண்டுகள் வீசப்பட்டு அந்தக் கிளர்ச்சி அடக்கப்பட்டு விடும்! இவ்வளவு வஞ்சகவெறி பிடித்த ஈவிரக்கமற்ற சர்வாதிகார பாஸிசக் கும்பல் இன்று ஆட்சியிலிருக்கிறது! அப்படிப்பட்ட இந்தக் கும்பலுக்கு எதிரே நாம் அடைந்திருக்கும் இந்த வளர்ச்சி மட்டும் போதாது. நாம் பூரண வளர்ச்சியடைய வேண்டும்.

அந்தப் பரிபூரண வளர்ச்சியை என்று நாம் அடைகிறோமோ அன்றுதான் நமக்கு விடுதலை நாள்!

அது ஆயிரத்தி தொளாயிரத்தி ஆறுபதா? அறுபத்தி ஐந்தா? அக்டோபரா? செப்டம்பரா? என்று காலத்தைக் கணித்து சொலல முடியாது!

இன்று காலையிலே சம்பத் பேசிய பேச்சை இங்கு சிலர் சரியாகப் புரிந்து கொண்டிருக்க மாட்டார்கள் என்று எண்ணுகிறேன்!

நண்பர் சம்பத் நேருவின் போக்கிலே ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டிருப்பதாகக் கூறினார்! நேருவின் போக்கிலே ஏற்பட்ட மாறுதல் சாதாரண மாறுதல் அல்ல. நாம் சொல்லுவோம் நேருவின் போக்கிலே மாறுதல் ஏற்பட்டதற்கு நாம் தான் காரணம் என்று! ஆச்சாரியார் சொல்லுவார்—நேருவின் போக்கிலே மாறுதல் ஏற்பட்டதற்கு காரணம் தான் தான் — வேறு எவருமில்லை என்று கூறலாம்!

நேருவின் போக்கிலேமாறுதல் ஏற்பட்டதற்கு காரணம் எவராக இருந்தாலும் அதைப்பற்றி கவலையில்லை. ஆனால் நேருவின் போக்கிலே ஏற்பட்டுள்ள மாறுதல் பெரிய மாறுதல்—ஒரு மகத்தான மாறுதல்—ஒரு மகத்தான மாறுதல் என்றுதான் சொல்ல வேண்டும்!

பாராளுமன்றத்திலே இந்தியை இந்தியா பூராவிலும் 1965க்குள் தேசிய மொழியாக ஆக்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தனர் இந்த தீர்மானத்தை நிறைவேற்றியே தீர வேண்டுமென்றும், 1965-க்குள் இந்தியை தேசிய மொழியாக ஆக்கியே தீரவேண்டுமென்றும் இந்தி வெறியர்கள் கூறினார்கள்! அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படுமானால் நாமெல்லாம் நமது பதவியை ராஜினாமா செய்துவிட்டு பெரியதொரு போராட்டம் நடத்தவேண்டிய நிலைமை வந்தாலும் வரலாமென்று பொதுக் குழுவில் கூட செல்லி இருந்தேன்.

நேரு பாராளுமன்றத்திலே இந்தி மொழியைப்பற்றி கொண்டு வரப்பட்ட தீர்மானத்தைப் பற்றி பேசுகையில் -ஆங்கிலம் தேவைப்படும் வரையில் அது நமக்கு ஓர் துணை மொழியாகவே இருக்கும் என்றும், இந்தி பேசாத மக்கள் தீர்மானிக்கும் வரையில் இந்தியைகட்டாயமாக்க மாட்டோம் என்று—"ஆங்கிலம் படித்து, இந்தி படிக்காவிட்டால் வேலை கிடைக்காது" என்ற நிலை நிச்சயமாக இருக்காது என்றும் கூறினார்!

அவர் இப்படி பேசிய நேரத்திலே அவருக்குப் பக்கத்திலே இருப்பவர்கள் எப்படி எப்படி தூபம் போட்டிருப்பார்கள் என்று எண்ணுகிறீர்கள்?

'பாராளுமன்றத்திலே நம் 500 பேர்கள் இருக்கிறோம்—அவர்களோ இரண்டு பேர்! சட்டசபையிலே நாம் 300 பேர்கள் இருக்கிறோம்—அவர்களோ 15 பேர்கள் தான்! நாம் ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும்'' என்றெல்லாம் கூட தூபம் போட்டிருப்பார்கள்!

நாம் கொஞ்சம் யூகித்துப் பார்த்தால் தெரியும்! நேரு என்ன சொல்லக் கூடும் என்று கொஞ்சம் எண்ணிப் பார்த்தால் புரியும்!

"அவர்கள் பாராளுமன்றத்திலே இரண்டு பேர்தான்! சட்டசபையிலேயும் 15 பேர்தான்! ஆனால் வெளியிலே இலட்சம், இலட்சமாக அல்லவா இருக்கிறார்கள்! நான் பட்டபாடு எனக்கல்லவா தெரியும்? உங்களுக்கு எப்படி புரியப்போகிறது! நான் சென்னைக்குப் போன போது இலட்சக் கணக்கிலே திரண்டு வந்து கறுப்புக் கொடி காட்டியது எனக்கல்லவா புரியும்'' என்று அவர் மனம் விட்டு பேசி இருக்கமாட்டார்—ஆனால் இந்தி வெறியர்கள் பேசும்போது அவருடைய உள்ளத்திலே இந்த எண்ணம் கட்டாயம் அரும்பி இருக்கத்தான் வேண்டும்!

நேருவின் மனதிலே ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டிருப்பது கண்டு மகிழ்கிறேன். உண்மையிலேயே அவருக்கு நான் வீரவணக்கம் செலுத்துகிறேன், ராஜாராம் நாயுடு நம்மையெல்லாம் பார்த்து கூத்தாடிகள் என்று சொன்னதற்காக நண்பர் ராஜேந்திரன் பெரிதும் மன வருத்தப்பட்டுபேசினார். எனக்கு இருக்கிற வருத்தம் எல்லாம் நாம் நிறையக் கூத்தாட வில்லையே என்பதுதான்! ஏதோ ராஜாராம் நாயுடு கூத்தாடிகள் என்று சொன்னதற்காக நாம் வருத்தப்பட வேண்டியது இல்லை!

அவர்கள் தொழுது வணங்கும் ஆண்டவனே சதா காலைத் தூக்கி ஆடிக்கொண்டேதானே இருக்கிறார்! ஆண்டவனே கூத்தாடும் போது நாம் ஆடக் கூடாதா என்ன?

நாம் புதிய புதிய நாடகங்களைத் திட்டி பட்டி, தொட்டி எங்கும் கூத்தாடிக் காட்ட வேண்டும்!

[11-ம் பக்கம் பார்க்க]

செல்லுங்கள்! சொல்லுங்கள்! பகையை வெல்லுங்கள்!

(10ம் பக்கத் தொடர்ச்சி)

"தமிழர்கள் எப்படி ஏமாந்தனர்! தமிழர்கள் ஒரு காலத்தில் எப்படி வீரத்தோடு வாழ்ந்தனர்" என்பதையெல்லாம் நாம் மக்களுக்கு கூத்தாடிக் காட்ட வேண்டும்!

நண்பர் ராஜேந்திரன் கலையை விட்டுவிட்டு இயக்கத்திலேயே சேர்ந்து விடப்போவதாகக் கூறினார்! அதைக் கேட்டுநான்பயந்தே போனேன்!

யார் எந்தத் துறையில் பணி புரிந்தாலும் அவர்கள் அந்தந்தத் துறையில் இருந்துகொண்டே இயக்கத்திற்குபணிபுரிவது தான் நல்லது!

மாநாட்டிற்கு தலைமை தாங்கும் சேது பாஸ்கரன் அவர்கள் சிறந்த மருத்துவர் என்று பலர் கூறினால் அது நமக்கு பெருமை தருவதாகும்!

"டைபாய்டா? நிமோனியாவா?" என்று கண்டுபிடிக்கத் தெரியாமல்இருப்பாரானால் அது நமகதுப் பெருமை தராது! டாக்டர் சேது பாஸ்கரன் தன் மருத்துவ தொழிலையே விட்டுவிட்டு வந்து விடுவதும் சரியில்லை!

டாக்டர் சேது பாஸ்கரன் சிறந்த வைத்திய நிபுணர்—நோயாளிகளைப் பார்த்தவுடனேயே—இவருக்கு இன்ன ஜுரம், அவருக்கு நிமோனியா இவருக்கு டைபாய்டு" என்று கூறும் அளவுக்கு திறமை பெற்றவர் என மக்கள் பேசிக்கொண்டால்—அதைக் கேட்கும்போது எனக்கு பெரிதும் மகிழ்ச்சி ஏற்படும்! நெடுஞ்செழியனைவிட ஒரு அடி உயரமாக வளர்ந்திருப்பதாகவே என்மனம் எண்ணும்!

நாம் எல்லாத் துறைகளிலும் மதிப்போடும் பெருமையோடும் இருக்க வேண்டும்!

ஒரு மாணவன் என்றால் 'அந்த மாணவனா அவன் நல்ல மாணவனாயிற்றே, கெட்டிக்காரப் பையனாயிற்றே—அவன் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவனாயிற்றே" என்று எவரும் கூறிட வேண்டும்!

ஆசானாக இருந்தால்—"அந்த ஆசானா? என்ன திறமை என்ன திறமை" என்று பேசிட வேண்டும்!

கவிஞன் என்றால்—"அவன் சிறந்த கவிஞனாயிற்றே, அவனுடைய கவிதைகள் மிக மதிப்பு வாய்ந்தவைகளாயிற்றே" என்று சொல்ல வேண்டும்!

கதை எழுதுபவரென்றால்—"ஆகா அவருடைய கதைக்கு ஈடு இணை உலகிலேயே கிடையாதே" என்று மதிக்க வேண்டும்!

ஒரு பெண் இருக்கிறாள்—அவளிடம் நிறைய நகைகள் இருக்கின்றன! காதுக்குப் போட்டுக் கொள்ள வேண்டிய நகைகளும், மூக்குக்குப் போட்டுக்கொள்ள வேண்டிய அணிகளும், கழுத்துக்குப் போட்டுக்கொள்ள வேண்டிய தங்க நகைகளும் இருக்கின்றன! ஆனால் அவள் அந்த நகைகளை யெல்லாம் அணிந்துகொள்ளாமல் பெட்டிக்குள் வைத்துப் பூட்டி பத்திரப் படுத்திக் கொண்டு—பெட்டியையும் கையிலே தூக்கிக் கொண்டு போனால் என்ன பயன்!

அவளைப்பார்த்து என்ன இந்தப் பெண்ணுக்கு நகைகளே இல்லையே என்று சொன்னால்—அந்த பெண் ஏனில்லை—என் பெட்டியைப் பாருங்கள் என்று பெட்டியிலுள்ள நகைகளைக் காட்டினால் யாது பயன்?

அதைப்போல் தான் ஒவ்வொரு துறையிலும் உள்ளவர்கள் அந்தந்தத் துறையில் பணியாற்றி தன் திறமையை வெளிப்படுத்த வேண்டும்,

நம்முடைய இயக்கத்திலே ஈடுபட்டுள்ள ஒரு கலைஞன் உச்சியிலே இருக்கிறான் என்றால் அது கழகத்திற்கும் மதிப்பு, எனக்கும் பெருமை தருவதாகும்!

ஒரு சமயம் லெனின் ஒரு பாட்டாளி தோழனிடம் தனது புரட்சிக் கருத்துகளை எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தான்! உடனே அந்தப் பாட்டாளித் தோழன் நானும் உங்களோடு சேர்ந்து புரட்சிக் கருத்துக்களை பரப்ப நினைக்கிறேன் என்றுகூறினான்.

"என்னுடைய ரத்தம்கொதிக்கிறது. நரம்புகள் முறுக்கேறுகின்றன! உடனே அனுமதி தர வேண்டும்" என்று கேட்டான்!

"நீ இருக்கின்ற இடத்திலேயே இருந்து கொண்டு புரட்சி கருத்துக்களை, புதுமை எண்ணங்களை பரப்பலாம்" என்று கூறினார்!

அது எப்படி முடியும் என்று கேட்டான்!

"நீ என்ன தொழில் செய்கிறாய்" என்று அந்தப் பாட்டாளி தோழனைப் பார்த்து லெனின் கேட்டார்!

"நான் தினமும்விறகுவெட்டிக் காலத்தைக் கடத்திக் கொண்டு வருகிறேன் என்று அந்தப் பாட்டாளித் தோழன் பதில் சொன்னான்!

"விறகு பிளக்கும் போது நீ என்ன சொல்லிக் கொண்டு பிளப்பாய்" என்று லெனின் கேட்டார்.

"ஆண்டவனே! எனக்கு உழைப்புக்குஏற்றகூலி கிடைக்கவில்லையே! என் எஜமான் எனக்கு நல்ல கூலியை தரவில்லையே! நான் எப்படிப் பிழைப்பது என்று சொல்லுவேன்" என்றான்.

"அதையேசொல்லு, திரும்பத் திரும்பச் சொல்லு, உரக்கச் சொல்லு, மேலும் சொல்லு, ஆண்டவன் காதிலே விழுகிற வரையில் சொல்லு—நீ வெற்றி பெறுவாய்" என்று லெனின் கூறினான்.

இதைப்போல நாமும் நம்முடைய பணிகளை—இருந்த இடத்திலிருந்து கொண்டே பணி புரியலாம்!

இங்கே நடைபெற்ற இரண்டு நாள் மாநாட்டில் வழங்கப்பட்ட கருத்துகள் உங்கள் ஐயப்பாடுகளை ஓரளவு போக்கி இருக்கும் என்று எண்ணுகிறேன்! இந்த மாநாட்டில் நல்ல உணர்ச்சிகளையும், எழுச்சியையும் அடைந்திருக்கிறீர்கள்!

செல்லுங்கள்! இங்கே கேட்டதைச் சொல்லுங்கள்! பகையை வெல்லுங்கள்! எனக்கூறி உங்களிடமிருந்துவிடைபெற்றுக் கொள்கிறேன்,

---

12-ம் பக்கத் தொடர்ச்சி)

"போராட்டம் நடத்தினால் வெற்றி பெறுவோமா மாட்டோமா என்ற சந்தேகம் வேண்டாம், இப்படைத் தோற்கின் எப்படை ஜெயிக்கும்? ஆகையால் அண்ணா அவர்களுக்கு எங்கள் மீது சந்தேகம் வேண்டாம், அறப்போருக்கு நாளைக் குறித்துத் தாருங்கள்!

"நமது இனம் வாழ்வதற்குத் தான் அறப்போருக்கு அழைக்கிறோம்! எதிர் காலத்தில் சவக்குழிக்குப் போக வேண்டுமென்றாலும், சிறைச் செல்ல வேண்டுமானாலும் நாங்கள் தயாராக இருக்கிறோம்! அதனால் இந்தப் போராட்டத்தை தள்ளிப் போட வேண்டாமென்றும் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்காலம் எவ்வளவு பயங்கரமான தாக இருந்தாலும் வெற்றி நிச்சயம்—நிச்சயம்—நிச்சயம் என்று தோழர் ப. உ. சண்முகம் கூறிமுடித்தார்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்னை நகர சபைத் தேர்தலில் பணத்தாலோ, காசாலோ நாம் வெற்றி பெறவில்லை. கழகத் தொண்டர்களின் இரத்த வியர்வையில் தான் நாம் வெற்றி பெற்றோம் என்பதை என்றுமே மறக்க முடியாது! ஒரு மாத காலம் அவர்கள் பட்டபாடு, அடைந்த கஷ்டம் சொல்லால் எழுத்தால் விளக்கிட இயலாது.

எல்லா ஊர்களிலும் நம் கழகத் தோழர்கள் அரும் பணிபுரிய வேண்டும்.

1962 வருகிறது என்பதை நம்முடைய கழகத்தோழர்கள் மறந்துவிடக் கூடாது! 1962-ம் வருடம் வருகிற தேர்தல் நமக்கோர் பலப் பரீட்சை, நம்முடைய சூரத்தனத்திற்கு ஓர் சவால்! அந்த சவாலுக்கு நாம் பதில் சொல்லுவதில் தான் நம்முடைய சூரத்தனம் வெளிப்படவேண்டும். இளைஞர்கள் இன்று முதலே அந்த சவாலை ஏற்றுக் கொண்டு பணிபுரிய வேண்டும்.

நமது அறிஞர் அண்ணா அவர்கள் மாநாட்டில் சொன்னார்கள்—

செல்லுங்கள்!

சொல்லுங்கள்!

வெல்லுங்கள்!

என்று கூறினார்கள்! அதையே நாங்களும் சொல்லுகிறோம்!

இன்றே செல்லுங்கள்!

நம் கொள்கைகளை சொல்லுங்கள்!

தேர்தலில் வெல்லுங்கள்!

திராவிடத்தை பெற்றுத் தாருங்கள்!

Registered as a Newspaper in CEYLON
Regd No.M. 7074 MALAIMANI விலை 16 காசு PhoneNo. 8?285

தென்னுடு ஒரு கேரளமாகும் ! ஒரு வங்காளமாகும் ! மதுரை முத்து

காமராஜரின் ஆயுட் காலத்திற்குள் திராவிடம் பெறுவோம் ! ப. உ. ஷண்முகம்

கலைஞர்களும் போராட்டத்தில் குதிப்பார்கள்! ஜாக்கிரதை! டி.வி. நாராயணசாமி

பூவிருந்த வல்லியில் போர் முரசம் !

மதுரை 8, முத்து பேசுகையில் இந்திய சர்க்கார் இந்த நாட்டை அன்னிய நாடுகளிடம் அடகு வைத்து கோடிக் கணக்கிலே கடன் வாங்குகிற தென்றும், மக்கள் மீது வரிக்கு மேல் வரியை விதிக்கிறதென்றும் குறிப்பிட்டார். இப்படியெல்லாம் கடன் வாங்கியும் வரிக்கு மேல் வரி விதித்தும் இந்த நாட்டு மக்கள் வாழ்விழந்து உண்ண உணவின்றி ஒரு வாய் சோற்றிற்கு வீதியிலே கிடக்கும் எச்சில் இலைகளுக்காக நாயுடன் போட்டி போடும் அளவுக்கு இன்றைய நிலை உள்ள தென்றும், தி. மு கழகம் நாட்டு மக்களுக்கு நல்வாழ்வளிக்கவே பாடுபட்டு வருகிற தென்றும் குறிப்பிட்டார். இருநூறு கோடி ரூபாய் செலவிலே இராணுவம் இருந்தும். போலீஸ் இருந்தும், துப்பாக்கிகள் இருந்தும், குண்டாந்தடிகள் இருந்தும் நேரு சென்னை மவுண்ட் ரோட்டிலே பவனி வரபயப்பட்டு கொல்லைப்புற வழியாக அழைத்துச் செல்லப் பட்டாரென்றும் அவர் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசுகையில் அண்ணு எனும் ஒரு சிறிய உருவமே இந்த நாட்டை ஆள்பவர்களை கட்டிக் காத்து வருகின்ற தென்றும், அந்த ஒரு சிறிய உருவம் வாய் திறந்து கட்டளையிடுமானுல் இங்கேயும், ஒரு கேரளம், ஒரு வங்காளம் உருவாக்க முடியுமே தவிர உருவாக்க முடியாதென்று நினைக்க வேண்டாமென்று ஆட்சியாளருக்கு கூறிக் கொள்வேன் என்ருர்.

மேலும் அவர் பேசுகையில் இந்த நாட்டு மக்களின் வாழ்வு வளம் பெற வேண்டுமானுல் ஒரே நாள் போராட்டத்தில் ஐம்பதினுயிரம் பேர் வேண்டுமானுலும் உயிரைவிடத் தயாராக இருக்கிருர்களென்றும், முதலில் தன் உயிரைக் கொடுக்கச் சித்தமாயிருப்பதாகவும். அதனுல் இந்த நாட்டு மக்களின் வாழ்வை வளமாக்க அண்ணுவை புதியதொரு பாதையை வகுத்துத், தருமாறு கேட்டுக் கொள்வதாகவும் கூறினுர்.

தோழர் நடிகமணி நாராயணசாமி பேசுகையில் அண்ணு ஆணையிட்டால் தானும், தம் போன்ற கலைஞர்களான நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி, எஸ், எஸ். ராஜேந்திரன், புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், மற்றும் பல கலைஞர்களும் திராவிட நாடு போராட்டத்திலே குதிக்கத் தயார் என்று குறிப்பிட்டார்,

அவர் மேலும் பேசுகையில் எம். ஜி. ராமச்சந்திரன் கால் முறிவுக்கு நன்றி தெரிவிக்கின்ற ஒரு அயோக்கிய கூட்டமும் இந்த நாட்டில் உள்ளதைக் கண்டு தாம் பெரிதும் மனவருத்தமடைவதாகக் கூறினுர்.

அடுத்தபடியாக தோழர் ப.உ. சண்முகம் திராவிட நாட்டின் எதிர்காலம் என்ற தலைப்பில் பேசுகையில் திராவிட முன்னேற்றக் கழகம் அழிந்து போக வேண்டுமென்று எண்ணுபவர்கள் ஏராளம் ஏராளம் என்றும், நாம் என்ன தான் செய்து விடுவோம் என்று ஆட்சியாளர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டு இருக்கிருர்களென்றும் கூறினுர். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: "கோவைக் கோமான், கொங்கு நாட்டுத் தங்கம் நிதியமைச்சர் சுப்ரமணியம் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து இது வாழாது வாழாது என்று கூறுகிருர்.

"இந்த நாட்டிலே ஒரு போராட்டம் நடத்தப் பட வேண்டும் அதற்கு நாம் பதவியில் இருக்கக் கூடாது. அரசு நகராட்சி மன்றத்திலிருந்து வெளியே வர வேண்டும். நாங்கள் பதினைந்து பேர் சட்ட சபையிலிருந்து வெளியே வரவேண்டும். சம்பத்தும், தருமலிங்கமும் டெல்லி பாராளு மன்றத்தை விட்டு வெளியே வரவேண்டும். இப்படி சாதாரண ஆட்களாக வெளியே வந்து கண்ணியம், கடமை, கட்டுப்பாடு என்ற மூன்று கேடயங்களை வைத்துக் கொண்டு போராட்டம் நடத்துவோமானுல் திராவிட நாடு கிடைப்பது நிச்சயம்.

"அண்ணுவின் ஆயுளுக்குள்ளாகவே திராவிட நாட்டைப் பெற வேண்டுமென்று சிலர் கூறுகிருர்கள். நான் சொல்லுவேன் அண்ணுவின் ஆயுட்காலமென்ன—காமராஜரின் ஆயுட் காலத்திற்குள்ளேயே திராவிட நாட்டை அடைந்தே திருவோம்,

"திராவிட நாடு கேட்கிறவர்கள் வெறியர்கள் என்று கூறுகிருர்கள். ஆமாம் நாங்கள் வெறியர்கள் தான்—இதிலே வெறியர்கள்—எங்கள் கொள்கையிலே நாங்கள் வெறியர்கள் தான்."

நாங்கள் திராவிட நாடு கேட்கிருேமென்ருல்—சும்மா கேட்கவில்லை. பாகிஸ்தானை கேட்பதற்கு ஜின்ன காட்டாத காரணங்களை காட்டுகிருேம், இந்த நாடு வாழ்ந்த நாடு. எங்கள் இனம் வாழ்ந்த இனம். இதற்கு ஆதாரம் தேவையா? குன்றுகளைப் பார்! திருமலை நாயக்கர் மகாலைப் பார்! வடக்கு வாழ்கிறது—தெற்கு தேய்கிறது என்று கூறி அதற்கு காரணங்களைக் காட்டினுல் ஒத்துக் கொள்ள மறுக்கிருய்.

"உணவு மண்டலத்தைப் பிரிக்க முடியாதென்று டெல்லி சர்க்கார் உன்னைப் பார்த்துக் கூறுகிறது. உணவு மண்டலத்தை பிரிக்க முடியவில்லையென்ருல் நீ ஏன் அமைச்சராக இருக்கிருய்? மலையாளத்தில் அரிசி போவதை தடை செய்ய முடியவில்லை—நீ ஏன் அமைச்சராக இருக்கிருய்?

"திராவிட நாட்டை நீ கொடுக்க வேண்டாம். நாங்களாக எடுத்துக் கொள்ளப் போகிருேம்

"திராவிட நாட்டைப் பெற அறப்போர் நடத்த வேண்டும்! அந்தப் போருக்கான நாளை தள்ளிப் போட வேண்டாமென்று அண்ணு அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்."

(11-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பாண்டியனுடைய நா அசையவில்லை! அவனுடைய உடலும் அசையவில்லை! இதயம் நின்று விட்டவனைப்போல், உயிரில்லா கற்சிலையைப் போல் நின்று கொண்டிருந்தான்!

'ஐயோ வேல்விழி! ஐயோ வேல்விழி" என்று தலையிலே பெண்களைப் போல் அடித்துக் கொண்டான்! அழுதான்! கோவென சிறுபிள்ளைகளைப்போல் அழுதான்! என் உயிரே நீ மாற்ருனுக்கு சொந்தமாகிவிட்டாயா என்று புலம்பினன்!

வஞ்சகி, மோசக்காரி, நாச எண்ணம் படைத்தவளே! என் வாழ்வை சுக்கல் சுக்கலாக உடைத்து விட்டாயே! என்று திட்டினுன்! நிலைதடுமாறி கீழே விழுந்து கிடந்தான்!

"ஐயோ அத்தான்!" என்று ரங்கநாயகி அலறினுள்! ஒன்றும் புரியாமல் பதறினுள்! பாண்டியனைத் தூக்கி தன் மடி மீது படுக்க வைத்துக் கொண்டு முகத்திலே தண்ணீரை தெளித்தாள்! அப்படியும் அவனுக்கு நினைவு வரவில்லை!

எப்படி வரும் உயிர் போய் விட்டால் உடல் இயங்குமா? வேல்விழி மாற்ருனுல் பறிக்கப் பட்ட பின்பு இந்த வையகத்தில் வாழ்ந்துதான் பயன் என்ன?

ஏன்? அவன் வேல்விழிக்காகவா பிறந்தான்! வேல்விழிக்காகவா வாழ்ந்தான்! அவனுடைய இலட்சியம் தாய்த் திருநாட்டின் விடுதலை! அவனது குறிக்கோள் பெற்ற பொன்னுட்டுக்குப் புது வாழ்வு! வேல்விழி இடையிலே கிடைத்தபுதையல்! போகட்டும்! அது தங்கப் புதையலாக இருந்தாலும், வைரப் புதையலாக இருந்தாலும் போகட்டும்! அவனது இலட்சியம் வாழ அவன் வாழவேண்டும்! அவனது குறிக்கோள் வெல்ல அவன் வாழ வேண்டும்!

பாண்டியனுக்கு அரைமணி நேரம் சென்ற பின்பு நினைவு வந்தது! எழுந்து உட்கார்ந்தான்! உலகத்திலே ஒரு பெரும் பிரளயம் வந்து ஏதோ இந்த உலகமே மாறிவிட்டதோ என எண்ணினுன்! ஆம்! அவனும் புதுமனிதனுனுன்! நாட்டின் விடுதலைக்காக புது புது திட்டங்களை மனதிலே உருவாக்கிக் கொண்டிருந்தான்!

(தொடரும்)

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி. எஸ். இளங்கோ, கல்விப் பிரகாசம் பிரஸ். 404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5
அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை-14.